Registered Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (24-8-66) இதழ் 194

பராபவ ஆவணி 8 ஜு: அவ்வ 7 புதன்கிழமை

## தமிழரசார் 'வீட்டில்' ஜே. ஆர்.

தமிழரசுக்கட்சியினரின் வீட்டில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மிகக் குஷியாக அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தமிழரசு வாலிப முன்னணியின் பதினோராவது மாகாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக நேற்று மாலை காங்கேசன்துறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் 'வீடு' போன்று ஒரு ட்ராக்டரில் அமைக்கப்பட்டிருந்த ரதத்தில் சைக்கிள் ஊர்வலமும், மோட்டார் கார் ஊர்வலமும் முன்னே செல்ல பவனியாக அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழரசுக்கட்சியின் தேர்தல் சின்னம் 'வீடு!'

# "தமிழர் சிங்களவருக்கு இதுதான் தாய்நாடு நேசக்கரம் நீட்டுகிறோம் உறுதியாகப் பற்றுங்கள்"

### வெள்ளம்போல் திரண்ட தமிழருக்கு இன்று அதிகாலையில் ஜே. ஆர். அழைப்பு

மாவிட்டபுரம், புதன்

"திரு. டட்லி சேனநாயகா முதல் தேசிய அரசாங்க அமைச்சர்களும் சிங்கள மக்களும் நேசக்கரம் நீட்டியிருக்கிறோம் அதை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்" என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று அதிகாலை ஒரு மணியளவில், காங்கேசன்துறையில் தமது உரையைக் கேட்பதற்காக நேற்றுப் பிற்பகல் முதல் இன்று அதிகாலை வரை வெள்ளம்போல் திரண்டிருந்த தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சிங்களவரும் தமிழரும் தாய்நாட்டுக்கு ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென அவர் கூறினார். தமக்களிக்கப்பட்ட மகத்தான வரவேற்புக்கு அவர் நன்றி தெரிவித்தார். நள்ளிரவு தாண்டி 12-15க்கு பேசத் தொடங்கிய திரு. ஜே. ஆர். காலை 1-04க்கு பேச்சை முடித்தார், இதன்பின் மந்திரி திருச்செல்வமும், திரு. இராசதுரையும் பேசினர்.

#### கடல் அலைபோல் ஜனசமுத்திர அலை

தமிழரசு வாலிபமுன்னணியின் பதினோராவது மாநில மகாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியான பொதுக்கூட்டம் காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் நேற்றிரவு 9-30 மணிக்கு ஆரம்பமானது. வாலிப முன்னணித் தலைவர் திரு. செ. இராசதுரை "ஈழத் திருநாடு" என்ற கட்சிக் கீதத்தைப் பாடி கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

பட்டினசபைக் காரியாலயத்துக்கு பின்னால் சிறிது தொலைவிலுள்ள சமுத்திரத்தில் அலைகள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு கரையை வந்து முட்டி மோதிக் கொண்டிருந்த அதே நேரத்தில் பொதுக்கூட்ட மைதானத்தில் நாட்டின் நாலா திசைகளிலிருந்தும் ஜனசமுத்திரம் அலை அலையாக வந்து மைதானத்துக்கு வெளியே வீதியிலும் ஓரங்களிலும், கட்டிடங்களிலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. எங்கும் தமிழரசுக்கட்சியின் மூவர்ணக்கொடிகளே காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

காங்கேசன் துறையிலிருந்து ஒன்பது மைல் தூரத்திலுள்ள குளப்பிட்டிச் சந்தியில் ஆரம்பமான பவனி கூட்ட மைதானத்தை சரியாக இரவு பத்து மணிக்குத்தான் வந்தடைந்தது. காங்கேசன்துறைச் சந்தியை அடைந்ததும்

(8-ம் பக்கம்பார்க்க)

### 'மாக்கியவல்லிக்கு ஒப்பான அரசியல்மேதை'
### ராஜாங்க அமைச்சருக்கு திரு. ராஜதுரை புகழ்மாலை

மாவிட்டபுரம், செவ். "இந்த நாட்டில் சர்வாதிகாரஆட்சி ஏற்படாமல்ஜனநாயக சக்திகளை வளர்த்த சிறந்த அரசியல் வாதியாக திரு.ஜே ஆர். ஜயவர்த்தன விளங்குகிறார். உலகில் சிறந்த அரசியல் மேதையாக விளங்கிய மக்கியவெல்லிக்கு ஒப்பான அரசியல்வாதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனவே" என்று மட்டு நகர் எம்.பி. திரு செ. இராசதுரை காச்கேசன்துறைப் பட்டினசபை முன்றலில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் பகிரங்கக்கூட்டத்துக்குதலைமை வகித்துப் பேசுகையில்குறிப்பிட்டார்.

திரு. இராசதுரை தொடர்ந்து பேசியதாவது: ஒரு நாட்டின் சிறுபான்மையின மக்களால் ஆட்சியை உருவாக்கவோ, அழிக்கவோ முடியுமென்பதனை இந்த நூற்றாண்டில் உலகுக்கு உணர்த்திய

(8-ம் பக்கம் பார்க்க)

### "மொழிவிஷயத்தில் இருதரப்பினருக்கும் கஷ்டமுண்டு"
### பண்டிதர் இரத்தினத்துக்கு பரந்தனில் உதவி மந்திரி பதில்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் மக்களுக்கு இன்னமும் அரசாங்க இலாகாக்களிலிருந்து சிங்கள மொழியிலேயே பதில்கள் வருவதாகவும் இதுபோன்ற பிரச்னைகளை விரைவில் நீக்க வேண்டுமென்றும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் இரத்தினம், பரந்தனில் வானொலி அஞ்சல் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவதற்கு வந்த ராஜாங்க அமைச்சரையும் உதவி அமைச்சரையும் வரவேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்

மொழி சம்பந்தமாக தமிழ்ப் பேசும் மக்கள் அனுபவித்து வந்த கஷ்டங்கள் தேசிய அரசாங்கம் குறைத்து விட்டனவாயினும் இன்னும் இருக்கும் சிறு கஷ்டங்களையும் நீக்க வேண்டுமென்று கூறிய

(8-ம் பக்கம் பார்க்க)

### 2 வருடத்தில் வடக்கில் வானொலி நிலையம் பூர்த்தியாகும் --ஜே. ஆர்

யாழ்ப்பாணம். புதன்

வடமாகாணத்தில் அமைக்கப்படவிருக்கும் வானொலி ஒலிபரப்பு நிலையம் இன்னும் இரண்டுவருடங்களுக்குள் செயல்படத் தொடங்கிவிடுமென்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன. நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் ஒலிபரப்பு நிலையத்துக்கான அஞ்சல் நிலையம் அமைப்பதற்கு அத்திவாரக்கல் நாட்டிப் பேசுகையில் தெரிவித்தார்.

அத்திவாரக்கல் நாட்டிய பின் அமைச்சர் ஜயவர்த்தன மேலும் குறிப்பிட்டதாவது:

பரந்தனில் நிறுவப்படும் வானொலி அஞ்சல் நிலையம் இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தின் புதிய அபிவிருத்தித்திட்டத்தின் ஒரு அம்சமாகும் இந்த நிலையம் இந்த ஆண்டில் அக்டோபர் மாத அளவில் செயல்படத்தொடங்கிவிடும். இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் இலங்கையின் பலபாகங்களில் டெலிவிஷன் வசதிகளையும் மக்கள் அனுபவிப்பார்கள்.

மக்களின் மனங்களைக் கவர்வதில் வானொலிக்கு இருக்கும் செல்வாக்கு அளவிடமுடியாதது. [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

### சுவாமிநாத தம்பிரான் யாழ்ப்பாணம் திரும்பினர்
### விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு

மாவிட்டபுரம், செவ்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான் இன்று காலை விமானத்தில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். விமான நிலையத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரானுக்கு மதுரை ஆதீனத்தில் பட்டம்பெற்று (மணி பாகவதர்)முதன் முறையாக யாழ்ப்பாண மண்ணில் காலடி எடுத்துவைத்த ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானுக்கு அவருடைய தந்தையார் நெற்றியில் விபூதியிட்டார். தம்பிரான் சுவாமிகள் தந்தையின் கால்களைத்தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டார்.

யாழ்ப்பாண மண்ணில் ஸ்ரீதம்பிரான் சுவாமிகள் காலடிவைத்ததும் மங்கள வாத்தியங்கள் முழங்கின. அன்பர் உள்ளங்கள் ஆனந்தமடைந்தன. காவியுடை உடுத்து துறவிக்கோலத்தில் காட்சியளித்த ஸ்ரீ தம்பிரான்

(8-ம் பக்கம் பார்க்க)

### ஒன்பது மைல் நீள அலங்கார பவனி
### பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அற்புதக்காட்சி

மாவிட்டபுரம், செவ்.

ஒன்பது மைல் நீள ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் காட்டிய மகிழ்ச்சியும், மரியாதையும் கட்டுமீறிய அன்புப் பிரவாகமும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை திணறடிக்க வைத்து விட்டது.

வாலிப முன்னணியினரின் 11-வது மாநில மகாநாடு என்பதனை நினைவூட்டுவது போல 11 அதிர் வெடிகள் அடுக்கடுக்காக முழங்க, [illegible] கோலம் பூண்டிருந்த குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தம்பதிகள் அசல் வீடு போன்று அமைக்கப்பட்ட ரதத்தில் உதவி மந்திரி, தமிழரசுத் தலைவர்கள், எஸ். ஜே. வி. செல்வநாயகம் தம்பதிகள், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், வே. ப. இரத்தினம், வி நவரத்தினம், செ. இராசதுரை ஆகியோர் பக்கங்களில் அமர்ந்திருக்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தமிழரசுக் கட்சியின்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டுறவு வைத்தியசாலை வளர அரசாங்கம் உதவும்"

## தெல்லிப்பழையில் அமைச்சர் ஜே. ஆர்.

குரும்பசிட்டி, செவ். "மக்களின் அத்தியாவசிய தேவையான சுகாதார சேவைகளைப் பூர்த்திசெய்து வைக்கக்கூடிய இவ்வைத்தியசாலையில் புதிய நோயாளர் விடுதியைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த விடுதியை அமைக்க உதவி புரிந்த திரு. சின்னத்துரையின் பரோபகாரசேவையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். திரு. சின்னத்துரையுடன் எனக்குப் பல வருடங்களாகத் தொடர்பு உண்டு. எனது சிறந்த நண்பர்களில் ஒருவரும் ஆவர். கூட்டுறவு வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு தேசிய அரசாங்கம் போதிய உதவிகள் செய்யும் என வாக்குறுதி அளிக்கிறேன்" என ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்றுகாலை தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் புதிய நோயாளர் விடுதியைத் திறந்து வைத்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அமைச்சருடன் பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி. பி. அத்தபத்து, திரு. நெவில் ஜயவீரா, மாவட்ட அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோரும் வைத்தியநிலையம் வந்து சேர்ந்தபோது காங்கேசன்துறை எம். பி. திரு. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் சு. நடராசா ஆகியோர் மாலை அணிவித்துவரவேற்று உபசரித்தனர்.

திரு. நடராசா மந்திரியை வரவேற்றுப் பேசும்போது "பொதுமக்களின் பிரயாசை, நன்கொடையாளர் மூலம் மட்டும் உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவு வைத்தியசாலைக்கு அரசிலர் உதவி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50 ஆயிரம் ரூபாயில் எமக்கும் ஒரு சிறுதொகை கட்டிட உபகரண வேலைகளுக்கு உபயோகிக்க தேசிய அரசாங்கம் அளிக்க முன் வர வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.


REGAL—JAFFNA
NOW SHOWING
HAROLD LLOYD
in
THE FUNNY
SIDE OF LIFE

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30 மணி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
முதலியோர் நடித்த
ஆயிரத்தில் ஒருவன்
(ஈஸ்ட்மன் கலர்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிற ஆடை

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
கடவுளைக் கண்டேன்


# "இலக்கியங்களுக்கு நூல்வடிவம் கொடுப்பதில் கஷ்டம்"

யாழ்ப்பாணம், புதன். "கடந்த பத்து வருடங்களாக ஈழத்து எழுத்தாளர் தாம் படைத்த இலக்கியங்களை நூல் வடிவம் கொடுப்பதில் வெகு தீவிரமாக முயன்று வருகிறார்கள். இது வரை 300-க்கு மேற்பட்ட நூல்கள் வெளியாகியுள்ளன. துப்பறியும் கதைகளாகவோ அன்றி புலன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆபாச நூல்களாகவோ இல்லாமல் பதினைந்து நாவல்கள் இப்பத்து வருட காலத்தில் தோன்றியுள்ளன. அவை உயர் மட்டத்திலுள்ள வாசகர்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய பெற்றியுள்ளனவாக உள்ளன" இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத்தினரால் நடாத்தப்பட்ட செல்வி பா பாலேஸ்வரியின் "சுடர் விளக்கு" என்னும் நாவல் அறிமுக விழாவுக்குத் தலைமைதாங்கிய இரசிகமணி கனக. செந்திநாதன் குறிப்பிட்டார்.

இவ்விழா இலங்கை - அமெரிக்க கலாச்சார நிலையத்தில் நடைபெற்றது.

"ஈழத்தில் வெளியிடப்படும் சிறுகதைகளும் நாவல்களும் இங்கு வாழும் மக்களின் நிலையையும் உணர்ச்சியையும் உணர்த்திக் காட்டுபவைகளாக அமைந்துள்ளன. 1955-ம் ஆண்டுக்குப் பின் ஈழத்தில் தமிழ்நாட்டுத் தொடர்பை எழுத்தாளர் அறுத்துவிட முயல்வதாக கூறுவது தவறு. இத் தொடர்பை எப்போதாவது நாம் துண்டிக்கமுயலவில்லை துப்பறியும் கதைகளும் ஆபாச இலக்கியங்களும் அங்கிருந்து இறக்குமதி செய்வதை நாம் வெறுக்கின்றோம். இதுதான் நிதர்சனம் நல்ல இலக்கியங்கள் எங்கிருந்தாலும் போற்றப்பட வேண்டும்.

திருவாளர்கள் மு. கனகராஜன், க. கணேசலிங்கம். செம்பியன் செல்வன் கவிஞர் கந்தவனம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் பிரசன்னமாக இருந்த எழுத்தாளர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். முதல் பிரதியை ரி. கே. இராஜசேகரம் வாங்கினார்.

யாழ். இலக்கிய வட்ட செயலாளர் திரு. நா. சண்முகநாதன் யாழ்வாணன் நன்றி தெரிவிக்கும்போது தேசிய ரீதியான இலக்கிய ஒருமைப்பாட்டை வளர்க்க யாழ். இலக்கிய வட்டம் சிங்கள எழுத்தாளருடன் தொடர்பு கொண்டுள்ளதென்றும் சிங்கள இலக்கியங்களை தமிழிலும் தமிழ் இலக்கியங்களை சிங்களத்திலும் மொழி பெயர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் கூறினார்.

# "கலைஞரின் நல்வாழ்வுக்கு புதிய முயற்சிகள் தேவை"

மாவிட்டபுரம், செவ். "கலைஞன் மேடையில் அலங்காரமாகக் காட்சியளித்தபோதிலும் அவனுடைய வாழ்க்கை முற்றிலும் கஷ்டமானது. இந்தநாட்டில் வாழுகின்ற கலைஞர்களின் நல் வாழ்வுக்காகப் புதிய முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவேண்டும்" என்று மாவிட்டபுரம் தமிழரசு வாலிபமுன்னணி மகாநாட்டில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. எஸ். டி. அரசு குறிப்பிட்டார்.

மாவிட்டபுரத்தில் நடைபெற்ற தமிழசு வாலிப முன்னணி மகாநாட்டில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள் கலைவாணர் அரங்கில் நடைபெற்றன. திரு. எஸ். டி அரசு தமது தலைமையுரையில் கூறியதாவது:-

தமிழ்க்கலைகள் சிறப்புப் பெற்றவை. தமிழனுடைய பெருமைக்கும் சிறப்புக்கும் தமிழ்க்கலைகளே காரணமாக விளங்குகின்றன.

தமிழ்க்கலையை வளர்ப்பதிலே எத்தனையோ கலைஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தக்கலைஞர்களுக்கு ஊக்கமும் ஆதரவுமளிக்கப்பட வேண்டும். கலைஞர்கள் மேடையில் நடித்தாலும் வாழ்க்கையில் கஷ்டமில்லை என்று நடக்கமுடியாது. கலைஞர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் நமது கலைகள் மேலும் வளர்ச்சி பெறமுடியும்

ஈழத்தில் எத்தனையோ சிறந்த கலைஞர்கள் இருக்கிறார்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசியல் வாதிகள் முயற்சி மேற்கொள்ளவேண்டியது அவசியம்."

கலைவாணர் அரங்கில் நாடகம், வில்லிசை முதலான கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

## சுழிபுரத்தில் கி. வா. ஜ.

சுழிபுரம், செவ். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டுப் பாராட்டப்பட்டு வரும் "கலைமகள்" பத்திரிகைஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் சுழிபுரம் பகுதிக்கு நேற்று முற்பகல் விஜயம் செய்தார். சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை வைபவத்தில் கலந்து கொண்டார் திரு. மு. சிவப்பிரகாசம் தமது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்துக் கௌரவித்தார். திரு. கி. வா. ஜகந்நாதன் தமக்களித்த சிறப்புக்கு நன்றி பாராட்டினார்.


வரிவிளம்பரம்

நன்றி

22-8-66ம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெற்ற திருமதி ஏ. அந்தோனியாப்பிள்ளை அவர்களின் பூமதானச் சடங்கின்போது நேரிலும், தந்தி, தபால்கள் மூலமும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கு கணவன்: ஏ. அந்தோனிப்பிள்ளை(மூ.முத்தையா), மக்கள்: டபிள்யு. மேரிமாகிறற். எச். ஏ. பெர்ணண்டோ (ஆசிரியர், றோ. க. பாடசாலை, பளை). ஏ மரியம்மா, எச். ஏ. ஞானப்பிரகாசம்(O/L.D.O. மன்னார்), இ. சபினு. மருமக்கள்: வி. எஸ். வில்பிறெற் (கல்லோயா சபை), பெ. மாகிறற், பி. அல்பிறெற் (நாரந்தனை). ஜி. திரேசா (ஆசிரியை, றோ க பாடசாலை தாழ்வுபாடு, மன்னார்), எஸ். இம்மனுவல் (ஆசிரியர், பத்திமா பாடசாலை, மன்னார்) ஆகியோர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். 14, மாட்டீன் றோட் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 882

விற்பனைக்கு

பொது அறிவுவினாவிடை

பொது அறிவு வினா-விடை 20 அப்பியாசங்கள் — 2000 பொருட் குறிப்புகள் - சகல அரசினர் பகிரங்கப் பரீட்சைகளுக்கும் உரிய கைநூல் விலை ரூபா 3/- ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 858


## பயிற்சி பெற சென்றுள்ளார்

சுழிபுரம், செவ்வாய் சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. சி. டி. மெண்டிஸ் உத்தியோக உயர்வு காரணமாக மூன்றுமாதகால பயிற்சி பெறுவதற்கு களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுள்ளார். இவர் பயிற்சியை முடித்துக்கொண்டு பின்னரும் சங்கானை நிலையத்திலேயே கடமையாற்றுவார் என அறியப்படுகின்றது.

## பட்டதாரிகள் பேட்டி

மாவிட்டபுரம், செவ். வேலையற்ற பட்டதாரிகள் தூதுகோஷ்டி ஒன்று இன்று காலை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை விருந்தினர் விடுதியில் வைத்துச் சந்தித்தது.

பட்டம்பெற்றுப் பல காலமாகியும் தாம் இது வரை வேலைகளைப் பெறமுடியாது தவிப்பதாக இத்தூதுகோஷ்டியினர் அமைச்சரிடம் தெரிவித்தனர். இவர்கள் அமைச்சரிடம் கையளித்த மகஜரில் தமது தேவைகளை விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஒப்பந்தம் பாதிக்கப்படாது


ஜாகர்த்தா, ஆக. 23 இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை ஜனாதிபதி சுகர்னோ எதிர்ப்பதின் காரணமாக அவ்வொப்பந்தம் எந்தவிதத்திலும்பாதிக்கப்படமாட்டாது என்று இந்தோனேஷிய உயர் ராணுவத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
அருணகிரிநாதர்



நவீன வீட்டுத் தளபாடங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.
ஸ்ரீ கணேச அச்சகம் அன்
பாஷன் பேணிஷிங் பலெஸ்,
5,7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுத உற்பத்தியை தடைசெய்யும் உடன்படிக்கை

## ஆயுதப்பரிகரண மகாநாட்டில் 8 நாடுகள் வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 23

அணு ஆயுத உற்பத்திக்குத் தடை விதிக்க வேண்டுமென்று வலியுறுத்தும் ஒரு அறிக்கையை மீண்டும் ஐ.நா.வில் சமர்ப்பிப்பதற்கு எட்டு நாடுகள் முடிவு செய்துள்ளன.

இந்த எட்டுநாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இன்று ஜெனிவாவில்கூடும் அணு ஆயுத பரிகரண மகாநாட்டில் இந்த எட்டுநாடுகளின் அறிக்கைமுதலில்சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கு இந்த மகஜரில் சம்பந்தப்பட்ட எட்டுநாடுகளும் வற்புறுத்தியுள்ளன.

# சீனாவில் சோவியத் எதிர்ப்புவலுக்கின்றது

ஹொங்கொங், ஆக. 23

சோவியத் எதிர்ப்பு இயக்கம் சீனாவில் இப்போது வலுப்பெற்று வருகின்றது. நேற்று பீகிங்கில் ரஷ்யதூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டக் காரர்கள் கூடி நின்று கோஷமிட்டார்கள்.

பீகிங் விஜயம் செய்துள்ள சாம்பியா உதவி ஜனாதிபதி திரு. கமாங்காவை வழியனுப்புவதற்கு விமான நிலையம் போகவிருந்த ரஷ்யத் தூதரை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து விட்டார்கள். விமான நிலையத்துக்குப் போகும் வழியில் ஆர்ப்பாட்டக் காரர்கள் கூடி நின்று தடைசெய்தனர்.

அந்தத் தெருவுக்கு திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத் தெரு என்று அவர்கள் சுவர்களில் எழுதினார்கள். வேறு சுலோகங்களையும் அவர்கள் சுவர்களில் எழுதினார்கள்.

## கிழக்குத் துருக்கியில்

இஸ்தான்புல், ஆக. 23

துருக்கியின் கிழக்குப் பகுதியில் இரண்டு தடவைகள் ஏற்பட்ட பூகம்பத்தினால் அதிர்ச்சியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் நேற்றைய இரவு முழுவதையும் திறந்த வெளியில் கழித்தனர்.

பூகம்பம் மீண்டும் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தினாலேயே அவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர்.

இதற்கிடையே இப்பகுதிகளில் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் ஆயிரத்துக்குமதிகமான துருப்புகள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 4 ஏவாயுதத்தளங்கள் தகர்க்கப்பட்டன

## ஹனோய் நகருக்கருகே யு. எஸ். விமானங்கள் குண்டு வீச்சு

டானங், ஆக. 23

ஹனோய் நகருக்கு அருகே விமானங்களைத் தாக்கி நொறுக்கும் சக்திபெற்ற நான்கு ஏவாயுததளங்களை அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டுவீசித் தகர்த்துவிட்டதாக அமெரிக்க வட்டாரங்கள் இன்று அறிவித்தன.

இந்தத் தளங்களில் ஒன்று ஹனோய்க்கு சுமார் 9 மைல் தொலைவில் இருந்தது. வடவியட்னாமிலுள்ள போக்குவரத்து ரஸ்தாக்கள் எண்ணெய்க்குதங்கள், ரயில் பாதைகள் போன்ற பல முக்கிய நிலைகளையும் அமெரிக்க விமானங்கள் தாக்கித்தகர்த்துள்ளன.

இந்தத் தாக்குதல்களால் வடவியட்னாமுக்கு பெருத்த நஷ்டம் விளைந்திருப்பதாக அமெரிக்க வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

## நிபந்தனைகளை ஏற்காவிடில் அமைதிக்கு இடமில்லை

வியட்காங்கியரின் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படாதவரை தென்வியட்னாமில் அமைதி நிலவப்போவதில்லை என்று வியட்காங்கியர் அறிவித்திருப்பதாக வடவியட்னாமிலிருந்து ஹாங்காங்குக்கு கிடைத்த செய்திகள் கூறின.

தென்வியட்னாம் தேசிய விடுதலை முன்னணியின் மத்தியக்குழு—வியட்காங்கின் அரசியல் கிளை பின்வரும் நிபந்தனைகளை அறிவித்திருக்கின்றது.

1. சுதந்திரம், அமைதி, ஜனநாயகம், கோஷ்டி சேராமை, தேசிய ஒருமைப்பாடு ஆகிய தென்வியட்னாம் மக்களின் சட்டரீதியான உரிமைகளை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும்.

2. தென்வியட்னாமிலிருக்கும் அமெரிக்க துருப்புகளும் அவர்களின் ஆதரவாளர் ஆயுத தளபாடங்களும் ராணுவத்தளங்களும் அகற்றப்பட வேண்டும்.

3. தென்வியட்னாம் மக்களின் ஒரே பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக தேசிய விடுதலை முன்னணியை அங்கீகரிக்க வேண்டும் தென்வியட்னாம் மக்களே தம் உள்நாட்டு விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ள உரிமை பெற வேண்டும்.

### அமெரிக்க 'ஜெட்' வீழ்ந்தது

வியட்னாமின் தென்கோடி எல்லையில் அமெரிக்க ஜெட் விமானம் ஒன்று வியட்காங் துருப்புகளினால் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் தென்வியட்னாம் மீட்புவிமானம் ஒன்று துப்பாக்கி முனையில் கீழே இறக்கப்பட்டதாகவும் செய்தியொன்று கூறுகின்றது.

## ஜேம்ஸ்பொண்ட் படப்பிடிப்புக்கு தடை

டோக்கியோ, ஆக. 23

மத்திய ஜப்பானிலுள்ள பழைய கோட்டையொன்றினில் நடைபெற்றுவந்த ஜேம்ஸ் பொண்டின் ('யூ ஒன்லி லிவ் டுவைஸ்' என்ற படத்தின் படப்பிடிப்புத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேசியப் பொக்கிஷம் ஒன்றாகக் கருதப்படும் இக்கோட்டையின் சுவர் ஒன்று படப்பிடிப்பின்போது பழுதாக்கப்பட்டதன் காரணமாக இத்தடையை ஜப்பான் கலாச்சார பொருட்கள் பாதுகாப்புக்குழு விதித்துள்ளது. (பி டி ஸி)

## கொக்கோவிலிருந்து பாண் தயாரிப்பு

அக்ரா, ஆக. 23

கானாவில் உள்ள மேற்கு ஜெர்மனி உற்பத்திஸ்தாபனமொன்று, கொக்கோப் பவுடரிலிருந்து பாண் தயாரிக்கட்டுவதற்காக ஆராய்ச்சியைச் செய்துவருகிறது. இத்தகைய பாண் ஒன்றை அடுத்த வருடம் ஆகஸ்டில் செய்து முடிக்க அத்தாபனம் திட்டமிட்டுள்ளது. (பி டி ஸி)

## தங்கம் கடத்தியதாக சீனர் கைது

டோக்கியோ, ஆக. 23

பொலிசார் இங்கு 1800 பவுண் பெறுமதியான 14 தங்கக் கட்டிகளைக் கைப்பற்றியுள்ளனர். ஹோர்வேயைச் சேர்ந்த கப்பலில் கடமையாற்றும் மூன்று சீனரை இதுசம்பந்தமாகப் பொலிசார்பிடித்துள்ளனர். சுங்கவிதிகளை மீறியதாக அவர்கள்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட மூவரும் ஹொங்கொங்கிலுள்ள சர்வதேச தங்கக் கள்ளக்கடத்தல் கோஷ்டியொன்றைச் சேர்ந்தவர்களென ஐயுறப்படுவதாகப் பொலிசார் தெரிவித்தனர். (பி டி ஸி)

## சீனப்பிரசாரத்துக்கு ரஷ்யா கண்டனம்

மொஸ்கோ, ஆக. 23

சோவியத் யூனியனுக்கும், சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிராக அபசாரப் பிரச்சாரம் நடாத்துவதாகச் சீனாவைப் 'பிராவ்டா' என்ற சோவியத்தினசரி குற்றஞ் சாட்டியுள்ளது.

ஒரு வாரத்துக்கு முன் பீகிங்கில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில், வடக்கு வியட்னாமுக்கு ரஷ்யாகாட்டிவரும் ஆதரவு போலியானது மட்டுமன்றி, காட்டிக்கொடுப்பதுமாகும்' என்று குறிப்பிடப்பட்டிருந்ததையே ரஷ்யப் பத்திரிகை சுட்டிக்காட்டி, மேற்படிகுற்றச்சாட்டைச் சீனாமீது சுமத்தியது. (பி டி ஸி)

## நாசரைக்கொலை செய்ய சதி

### 7 பேருக்கு மரண தண்டனை

கெய்ரோ, ஆக. 23

எகிப்திய ஜனாதிபதி நாசரைக் கொலைசெய்து, அரசாங்கத்தைப் பலாத்காரம் மூலம் கவிழ்க்கச்சதி செய்த குற்றத்திற்காக தடைவிதிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவக் கூட்டின் 7 அங்கத்தவர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் 25 பேர் ஆயுட் கடூழியச் சிறைத்தண்டனைபெற்றனர். இவர்களில் ஒருபெண்ணும் இருந்தாள். இன்னும் நான்குபேர் 10 வருடக் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். (பி டி ஸி)

## அமெரிக்க பாதுகாப்பு காரியதரிசி கூற்று

### லோக் சபாவில் எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 23

சென்ற வருடம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட போர், அடிப்படையில் ஓர் இந்து—முஸ்லிம் மோதலே என்றும், அது அமெரிக்காவின் வலியுறுத்தலின்பயனாகவே நிறுத்தப்பட்டது என்றும் அமெரிக்க பாதுகாப்புக் காரியதரிசி ரொபேட் மக்னமாரா கூறியுள்ளதை இங்கு லோக் சபா அங்கத்தவர்கள்கடுமையாக ஆட்சேபித்துள்ளனர்.

இதற்குப் பதிலளிக்கையில், இவ்விஷயம்அமெரிக்க அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டதென்றும், திரு. மக்னமாராவின் கூற்று அமெரிக்க அரசாங்கத்தின் கருத்தாகாது என்று அவர்கள் உறுதியளித்திருப்பதாகவும் வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் கூறினார்.

இந்தியா ஓர் மதச்சார்பற்ற நாடு என்பதையும், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே உள்ளபிளவுதான் இந்திய-பாகிஸ்தான் சண்டைக்குக் காரணமாக இருக்கும் என்பதில் அர்த்தமில்லை என்பதையும் அமெரிக்க அரசாங்கம் ஏற்றுள்ளதென்றும் திரு. சுவர்ண்சிங் மேலும் கூறினார்.

அமெரிக்க அரசாங்கம்இவ்விஷயத்தில் தனது கருத்துக்களை தெரிவித்துவிட்ட படியால், நாம் மேற்கொண்டு இதைத்தொடர வேண்டியதில்லையென திரு. சுவர்ண்சிங் குறிப்பிட்ட பொழுது, 'இல்லை, இல்லை' என்ற சப்தங்கள் கேட்டன.

''திரு. மக்னமாராவின் கூற்றை அவர்கள் உத்தியோகபூர்வமாக மறுப்பார்களென நாம் எதிர்பார்க்க முடியாது'' என்று திரு. சுவர்ண்சிங் மேலும் தெரிவித்தார். (பி.டி.ஸி.)

## பிரதமர் வில்சனுக்கு தொழிற்சங்க எதிர்ப்பு

லண்டன், ஆக. 23

பிரதமர் வில்சனின் புதிய சம்பளச் சுருக்கும் கொள்கைக்குத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

வேதியங்கள், விலைவாசிகள் ஆகியவற்றைச் சிக்கனத்துக்காகக் குறைக்கும் பிரதமர் வில்சனின் கொள்கைக்கு ஏற்கெனவே எதிர்ப்புத் தெரிவித்துள்ள போக்குவரத்து, சுரங்கத்தொழிலாளிகள், உள்ளூராட்சி உத்தியோகத்தர்களைப்பிரதிநிதித்துவம் செய்யும், பெரிய தொழிற்சங்கங்களுடன் 350,000 அங்கத்தவர்களைக் கொண்ட கடைச்சிப்பந்திகள் சங்கமும், 90,000 அங்கத்தவர்களைக் கொண்ட எழுதுவினைஞர் சங்கமும் இப்போது சேரத் தீர்மானித்துள்ளன.

இன்னும் இருவாரங்களில் கூடவிருக்கும் தொழிற்சங்கங்கள் காங்கிரசின் வருடாந்த மாநாட்டில் பிரதமர் வில்சனுக்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் அறிகுறிகள், இத்தீர்மானத்தால் மேலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. (பி டி ஸி)

## கலாச்சார ஒப்பந்தம்

காபுல், ஆக. 23

ஆப்கானிஸ்தானும் பிரான்சும் கல்வி. கலாச்சார ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டிருக்கிறதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின்கீழ், பல்கலைக்கழகங்கள், விஞ்ஞான நிறுவனங்கள், கலாசார இயக்கங்கள் மூலம் இலக்கிய, கலாசாரப் பரிமாறல்கள் இடம்பெறும். (பி டி ஸி)

# சந்திரனில் மனிதன் இறங்கக்கூடிய பகுதிகள்

## அமெரிக்க செய்மதி படம் பிடிக்கிறது

கென்னடிமுனை, ஆக. 23

சந்திரனைச் சுற்றிவரும் அமெரிக்கச் செய்மதி 'ஆர்பிட்டர்' சந்திரனுக்கு மிகவும் சமீபமாகச் சென்று மனிதன் இறங்கக்கூடிய பகுதிகளைப் படம்பிடிக்க ஆரம்பித்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்மதி இப்பொழுது சந்திரனிலிருந்து முப்பத்து ஆறு மைல் தூரத்தில் வலம் வந்துகொண்டிருக்கிறது.

செய்மதியில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு 'காமரா'க்களில் ஒன்று மட்டுமே திருப்திகரமாகச் செயல்படுகின்றதென்றும் சந்திரமண்டலத்தில் மனிதன் இறங்கக்கூடிய பகுதிகளை மிகவும் சமீபமாகச் சென்று('குளோஸ் அப்') இது படம்பிடிக்கும் என்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்வாக்கு

பிறரது குற்றங்களை நாம் ஆராய்ந்துகொண்டிருப்பின், நம்மிடமுள்ள குணங்கள் குறைந்து, குற்றம் அதிகரிக்கும். பிறரது குற்றங்களை ஒதுக்கி நல்லவற்றைப் பார்ப்பின், நமது குணங்கள் அதிகரிக்கும். இது அனுபவம் கண்ட உண்மை.

சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

ELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 189

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆவணி மீ 8 (24-8-66)


## அமைச்சரின் அழைப்பு!

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்கள் அளித்த உதவியைப் பாராட்டியதுடன் எந்தப் பிரச்னையையும் தீர்க்கக்கூடிய ஆற்றல் அரசாங்கத்துக்கு உள்ளது என யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணஞ்செய்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியிருக்கிறார். செயல்வீரரான திரு. ஜயவர்த்தனவின் யாழ்ப்பாண விஜயத்தினால் சமூக ஒற்றுமை மேலும் வலுப்பெற்று நாடு முன்னேற உதவ வேண்டும்.

தேசிய ஐக்கியத்தை உருவாக்கி விட்டோம் என்று ஆளும் கட்சியினர் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். "இது என்ன ஐக்கியம்?" என்று எதிர்க்கட்சியினர் சிலர் மனம் வெதும்புகின்றனர். இத்தனைக்கும் காரணம் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்குத் தமிழ் மக்கள் அளித்த ஆதரவும் ஒத்துழைப்பும்தான். இதைஉணர்ந்துகொண்டதால் தான் ராஜாங்க அமைச்சர் தமிழ்மக்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்திருக்கிறார்.

பெரும்பான்மைச் சகோதரரின் நட்புறவும், நல்லெண்ணமும் இல்லாமல் இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்கள் சகல உரிமைகளுடன் வாழமுடியாதென்பதை தமிழ் பேசும் மக்களும் உணர்ந்துகொண்டனர். எனினும் தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பை நாடி பெரும்பான்மைச் சமூகத்தினர் நேசக்கரம் நீட்டியதும் சிறுபான்மையினர் கௌரவத்தை விட்டுக்கொடுக்காது ஏற்றுக்கொண்டனர்.

பெரும்பான்மைச் சமூகத்தினரும், சிறுபான்மைச் சமூகத்தினரும் ஒற்றுமைப்படாவிடில் இரு சமூகத்தினருக்கும் முன்னேற்றம் இல்லை என்பதையும், இந்நாட்டின் சகல மக்களும் ஒன்றுபட்டுத் தேசிய ஐக்கியம் ஏற்படாவிடில் நாடு முன்னேறமுடியாது என்பதையும், நாடு பிளவுபட்டிருந்தால் கிடைத்த ஜனநாயக சுதந்திரமும் பறிபோய் விடக் கூடுமென்பதையும் கடந்த ஆண்டுகளில் பெற்ற அனுபவத்திலிருந்து பெரும்பான்மைச் சமூகத்தினரும் சிறுபான்மைச் சமூகத்தினரும் உணர்ந்து கொண்டனர். இதன்பயன்தான் தேசிய அரசாங்கம் உருவாகி, சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியம் மீண்டும் ஏற்பட்டுவருகிறது.

தேசிய ஒற்றுமை சீர்குலைந்திருந்தால் நாட்டில் பல பிரச்னைகள் தோன்றின. நாடு சுதந்திரமடைந்து பல வருடங்களாகியும் பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை. பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்கான வாய்ப்புகள் இருந்தும் தேசிய ஒற்றுமை இல்லாததால் நாடுசீர்குலைந்தது. இன்று நிலைமை முற்றாக மாறிவருகிறது. "எந்தப் பிரச்னையையும் தீர்க்கும் ஆற்றல் எமக்கு உள்ளது" என்று திரு. ஜயவர்த்தன கூறுகிறார். ஐக்கியம் உருவாக்கப்பட்டுள்ளபோதிலும் தமிழ் பேசும்மக்களின் குறைகள் பல இன்னமும் நீங்கவில்லை; வகுப்புத் துவேஷத்தை மீண்டும் கிளப்பிவிட இன்னமும் சிலர் முயற்சி செய்துவருவதாகப் பிரதமரே சிலதினங்களுக்கு முன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்திருக்கிறார். எனவே வகுப்புத்துவேஷம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடம் கொடுக்காமல் தமிழ்பேசும் மக்களின் குறைகளைத் துரிதமாக நீக்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவர்களுடைய பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.

தீவுப்பகுதிக்கு விஜயஞ் செய்த ராஜாங்க அமைச்சர், அங்குள்ள மக்களுக்குள்ள குடிதண்ணீர்ப் பிரச்னைகளையும் இதர பிரச்னைகளையும் பற்றி அறிந்துகொண்ட பின் அவற்றை நீக்குவதற்கு முயற்சி செய்வதாகக் கூறியிருப்பதுடன் தேசிய ஐக்கியம் ஏற்பட்டுவிட்டதால் அவர்களை தென்னிலங்கையில் வந்து குடியேறும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் இலங்கையர் அனைவரும் சென்று குடியேறி வாழவேண்டியதுதான். இதன் மூலம் சமூக ஒற்றுமை வலுப்பெறவும் வழிபிறக்கும். என்றாலும் பிரச்னைகளைக் கண்டு தங்கள் சொந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்குப் போகமுடியுமா? போகத்தான் விரும்புவார்களா?

தீவுப்பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னை தீர்க்கமுடியாத ஒரு பெரும் பிரச்னையல்ல. அரசாங்கம் உதவியளித்தால் குடிதண்ணீர் பிரச்னையை தீவுப்பகுதி மக்களே தீர்த்துக்கொள்வர். தீவுப்பகுதியில் மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடற்றொழிலையும் கைத்தொழிலையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. உழைப்பும் ஊக்கமும் உடையவர்கள் இப்பகுதி மக்கள். உதவியும் உற்சாகமும் அளித்தால் வரண்ட இப்பிரதேசம் வளம்கொழிக்கும் பகுதியாகிவிடும்.

கடற்றொழிலை நவீன முறையில் விருத்தி செய்யவும் மற்றும் இங்கு கனரகத் தொழிற்சாலைகள் அமைக்கவும், சிறுகைத்தொழில், குடிசைக்கைத்தொழில்களை அமைக்கவும் அரசாங்கம் [illegible] இடம் வகுத்துக் [illegible] உதவியும், ஊக்கமுமளித்தால் இப்பகுதி மக்கள் மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரமே விருத்தியடையும். சிறு சிறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக இப்பகுதிமக்களை தென்னிலங்கைக்கு அழைப்பதைவிட பிரச்னைகளைத் தீர்த்து அவர்கள், தங்கள் பகுதியையும் நாட்டையும் விருத்திசெய்வதற்கு உதவியளிக்க வேண்டும். எப்பிரச்னையையும் தீர்க்கும் செயல் [illegible] அமைச்சருக்கு இது பெரிய விஷயமல்ல.

## 'கொடுத்தவாக்குறுதிகளை மீறிவிடமாட்டோம்'

### சங்கானை வரவேற்பில் ஜே. ஆர். வாக்குறுதி

சங்கானை, திங்கள்

"1956-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டுவரை இந்த நாட்டின் பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஒரு கெடுபிடிப் போர் நடந்து வந்தது. இதனால் தேசிய முன்னேற்றமும் நாட்டின் பொருளாதாரமும் படுமோசமான நிலையை அடைந்தன. ஆனால் இன்று பருத்தித்துறையிலிருந்து தெவேந்திரமுனை வரை தேசிய அரசாங்கப் பிரதிநிதிகள் இருப்பதால் இப்பிரச்னைகளை நாம் சீக்கிரம் தீர்க்க முடியுமென நம்புகிறோம்.

நாங்கள் வாக்குறுதிகளைக் கொடுப்பதில்லை. கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதுமில்லை. அரசியலில் மிகுந்த அனுபவ திறமையுமுள்ள பிரதமரையும் அமைச்சர்களையும் கொண்ட எங்கள் தேசிய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றியே வரும்"

ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் பாரியாருக்கும் ஏனைய தென்னிலங்கை உறுப்பினர்களைக் கொண்ட நல்லெண்ணத் தூதுக்குழுவுக்கும் சங்கானை அரசடி வயிரவாலய முன்றலில் பட்டினசபை அளித்த வரவேற்பில் அமைச்சர் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சரும் அவரது குழுவினரும் பட்டின சபைக் காரியாலயத்திலிருந்து ஊர்வலமாகக் கூட்ட மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் "காலியான திறைசேரியுடன்தான் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். இதனால் வெளிநாடுகளில் உதவி எதிர்பார்க்க வேண்டி இருக்கின்றது. இது ஒரு ஜனநாயக நாடு. 5 வருடங்களின்பின் மக்கள் முன் நாம் செல்ல வேண்டியவர்கள். உங்கள் பிரச்னைகளை அவசரப்பட்டுத் தீர்க்க முயற்சித்தால் நாங்கள் செல்வாக்கை இழக்க வேண்டிவரும். உங்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் உங்கள் பிரச்னைகளைச் சிறிது சிறிதாக 5 வருடங்களுக்குள் தீர்க்க முடியுமென்று நம்புகின்றேன் என்றார்."

வட்டுக்கோட்டை உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் "சிலஆண்டுகளுக்குமுன் எங்கள் மக்கள் கறுப்புக்கொடி காட்டினர். 9 வருடங்களாக எங்களுக்கிருந்த கஷ்டங்கள் நீங்கி இப்பொழுது தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வகுப்பு வெறியைக் குழிதோண்டிப் புதைத்த பெருமை ராஜாங்க அமைச்சுக்கே உரியது. என்றார்."

கூட்டத்திற்கு பட்டின சபைத் தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார்.

## இழந்து போன உரிமைகளை மீண்டும் பெறவே விரும்புகின்றோம்

### ஜே. ஆர். வரவேற்பில் தீவுப்பகுதி எம். பி. உரை

குரும்பசிட்டி, செவ்வாய்

சென்ற பத்து ஆண்டுகளுக்குமுன் சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய பூசல் பேதங்கள் அகன்று ஒருவித இன ஒற்றுமை இன்று தோன்றியுள்ளது, வரவேற்கத்தக்கது. தமிழர்கள், சிங்கள மக்களுக்கு சமமானவர்கள்; எந்த உரிமைகளிலும் குறைந்தவர்களல்ல. எமது இழந்த உரிமைகளைமீண்டும் நிலைநாட்ட விரும்புகிறோம்." இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு ஊர்காவற்றுறை பட்டினசபை அளித்த பொது வரவேற்பிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தன கோஷ்டியினர் துறைமுக இறங்குதுறையை வந்தடைந்ததும் பட்டின சபைத்தலைவர் திரு. ச. ம. அல்பிரெட் உட்பட ஏனைய உறுப்பினர்களாலும் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இறங்குதுறையில் இருந்து சந்திவரை மகர தோரணங்கள் தேசிய, பலவர்ணக் கொடிகளால் அலங்கரிப்பட்ட, பாதையில் மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

திரு. வி. நவரத்தினம் மேலும் பேசுகையில், மந்திரியுடன் கூட வந்துள்ள இ. போ. ச. வைச் சேர்ந்த மேஜர் தர்மபாலா, ஒலிடிலாவா ஆகியோர் தீவுப்பகுதியில் பஸ் போக்குவரத்துச் சீர்கேடுகளைப் போக்க உதவி செய்வர் எனக்கூறினார்.

பட்டினசபைத் தலைவர் திரு. அல்பிரட் அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில். சென்ற 10 ஆண்டுகளுக்கு முன் நமதுநாடு இனக்கலவரம் என்னும் சூறாவளியில் சிக்குண்டு அடைந்த இன்னல்களையும் பொருளாதார வளங்குன்றி நாம் அனைவரும் மேற்கொண்ட கஷ்டத்தையும் ஓரளவு நீக்கி ஈழநாட்டில் சமாதானத்தை உதிக்க வைத்த பெருமை தேசிய அரசாங்கத்தைச் சாருமென்றும், தீவுப்பகுதிக்கு குழாய் நீர்த்திட்டமும், மின்சாரமும் அமைத்துத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு விஜயம் செய்த திரு. ஜயவர்த்தனவை சைவ சமய ஆசாரப்படி காளாஞ்சி கையளித்து ஆலய பிரதம குருக்கள் வரவேற்றார். விசேட பூசை வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் ஸ்ரீ நாக தீப விகாரைக்குச் சென்று புத்த பகவானை மலர் சாத்தி வணங்கினார்.

## ஐயாறன் எழுதுவது

"வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத" திருஞானசம்பந்தசுவாமிகள், நேற்று மதுரையிலிருந்து நம் ஈழத்துக்கு விமானமூலம் பறந்து வந்தார்.

உண்மைதான். அன்று ஆலவாயிலே சமணர்களால் தீ வைக்கப்பட்ட மடம், இப்போது மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனமாக தமிழையும் சைவத்தையும் பரப்பி வருகின்றது. சைவ சமய குரவர்களிலே ஒருவரின் பெயரால் நடைபெற்று வரும் ஒரே புராதன ஆதீனம் மதுரையிலுள்ளது தான்.

அங்கு இப்போது 291-வது குருமகா சந்நிதானமாக வீற்றிருப்பவர் ஞானசம்பந்தரின் பிரதிநிதியாக ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமசாரியசுவாமிகள் என்ற பெயருடனேயே விளங்குகின்றார்கள். அவரிடம் காஷாயம் பெற்று, அந்த ஆதீனத்தின் தம்பிரானாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் நேற்று பலாலி விமான நிலையத்துக்கு வருகையில் அந்த ஆதீனத்தின் மூலஸ்தானத்திலிருந்து திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளின் அழகான திருவுருவப்படத்தைக் கொண்டுவந்து, நல்லூரிலுள்ள ஆசிரமத்தில் வைத்து தீபாராதனை எடுத்து பிரசாதம் வழங்கினார். ஞானசம்பந்தர் இங்கு வந்துவிட்டதாகக் கூறுவதில் தவறுண்டா?

ஃ ஃ ஃ

வண்ணை ஸ்ரீ வைத்தீச்சரப் பெருமான், நல்லூர் சிவபெருமான், நல்லூர்க்கந்தன் இம்மூவரும் பிரசாதம் மாலை முதலியவற்றை விமானநிலையத்துக்கு அனுப்பி வைத்து ஸ்ரீ சுவாமிநாத அடிகளாவாருக்கு அருள் செய்தனர். ஏராளமான அன்பர்கள் மாலைகளைப் போட்டு வணங்கி வரவேற்வேற்றனர். மேளவாத்தியமும், ஹரஹர கோஷங்களும் முழங்க, அடிகளாரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர்.

வழியில் புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் ஆலயத்திலே பூர்ண கும்பம் வைத்து வரவேற்றனர். அந்த ஆலயத்தில் தரிசனம் செய்தபின் அடிகளாரைப் பாராட்டிப் பேசுகையில், அவரால் அந்த ஊருக்கு மட்டுமன்றி ஈழத்துக்கே பெருமையும் நன்மையும் கிடைப்பதாய்இருப்பதாகக் குறிப்பிட்டு வாழ்த்தினர்.

ஃ ஃ ஃ

வழியிலே பல இடங்களில் பூர்ண கும்பம் வைத்து வரவேற்றனர். "பூபாரம்" தாங்க முடியாதபடி அவ்வளவு மாலைகள். பின்னர் நல்லூர்க் கோவிலில் தரிசித்து வணங்கிவிட்டு, தமது ஆசிரமம் அடைந்தார். மதுரையிலிருந்து திருஞானசம்பந்தர் வந்துவிட்டதால், இங்கு சைவம் புத்துயிர் பெற்றுள்ளதாகவே உணர்ந்தேன். சைவசமய சரித்திரம் ஆக்கப்பட்டு வருகின்றது.

வருகிற பெப்ரவரி மாதம் மதுரை மகாசந்நிதானம் இங்கு வருகிறாராம். அங்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 10 அல்லது 15 பேர் சைவர்களாக மதம் மாறி வருகின்றார்களாம். கோவில்களில் கூட்டுப்பிரார்த்தனை, பிரசங்கம் முதலியன நடக்கின்றன ஆடி வீதியிலே நடைபஜனையும் நடக்கிறது. அங்கு நடைபெறும் சைவப்

(5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரிக்குமுன் மாவட்டசபைகள் அமைக்கப்படவேண்டும்

## தமிழ் மொழி சட்டத்தை அமுல் செய்ய தனித் திணைக்களம் அவசியம்

### தமிழ்ப் பகுதிகளில் தொழிற் பேட்டைகள்

### தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டு தீர்மானங்கள்

மாவிட்டபுரம், செவ்.

''ஒற்றையாட்சித் திட்டத்தை ஒழித்து தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை நிலைநாட்ட நாட்டுக்கு ஒரு சமஷ்டி அரசாங்க அமைப்பைப் பெறவேண்டும். தமிழ் மொழிக்கு நாடு பூராவும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும்'' என்று தமிழரசு வாலிப முன்னணியின் மாநில மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும்சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:—

சகல உரிமைகளையும் உள்ளடக்கியபூரத்துவம் பெற்ற மாவட்ட சபைகளை தேசிய அரசாங்கம் 1967-ம் ஆண்டு தை மாதத்துக்கு முன்னதாக அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இம் மகாநாடு தீர்மானித்தது.

தமிழ்மொழிச் சட்ட விதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பல மாதங்களாகியும் இதுவரை அவை இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் இன்னும் நடைமுறைக்கு வராதது தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுத்துள்ளது என்பதைத் தெரிவிப்பதுடன் இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு தனித் திணைக்களம் நிறுவி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

தமிழ்பேசும் மக்கள் கலை, கலாச்சார, விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ற ஒரு தன்னிறைவு பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தை சாதி சமய, இன வேறுபாட்டுக்கு மக்கள் பூரண உரிமை கொண்டாடும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொதுவில் திருமலையில் நிறுவப்பட வேண்டுமென்றும், இப்பல்கலைக்கழகம் எவ்வித தாமதமுமின்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

அரசாங்க வர்த்தமானியில் பதவி வெற்றிடங்கள் உத்தியோகத் தேர்வுகள், பதவி உயர்வுகள் பற்றிய விளம்பரத்தில் 1956-ம் ஆண்டுஇயற்றப்பட்ட உத்தியோக மொழிச்சட்டத்துக்கு அமைய கடமையாற்றுவேன் என சேவை நிபந்தனை கோரப்படுவது தமிழ் மொழி விசேட விதிச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின்னும் நீடித்திருப்பது தமிழினத்தைப் பொறுத்தவரையில் மாற்றியமைக்கப்படவேண்டும் அல்லது அந்நிபந்தனை முற்றாக நீக்கப்படவேண்டுமென இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

வடக்கு கிழக்கு பகுதிகளிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் மீன்பிடித்துறை நிறுவுவதற்கும் சிறு கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கும் மகாவலி கங்கையை வடக்கேதிருப்பி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், இன்றைய தேசிய அரசாங்கம் முழுக் கவனமெடுத்து செயல்பட வேண்டுமென இம்மகாநாடு கோருகின்றது.

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்றும், தோட்டப்பாடசாலை மாணவர்களின் கல்வி நலனில் அக்கறை செலுத்தவேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலையை உடனடியாகசிரேஷ்ட தொழிற்பாடசாலையாக தரம் உயர்த்துவடன் மட்டக்களப்பில்கனிஷ்ட தொழிற்பாடசாலையை ஆரம்பிக்க நடவடிக்கையும் எடுக்கவேண்டுமென தேசிய அரசாங்கத்தை இம் மகாநாடு வற்புறுத்துகிறது.

இந்திய பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம், கலை, விவசாயம், மனையியல், உடற்பயிற்சி, சங்கீதம் ஆகியவற்றில் பயிற்சிபெற்றுவந்த நிலையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் முற்றாகத்தடை செய்ததை தேசிய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன் மீண்டும் இத்துறைகளில் இந்திய பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு தேசிய அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக வரவுசெலவுமதிப்பீட்டில் இடம்பெற்றுவரும்மட்டக்களப்பு தாதிமார் பயிற்சிக்கல்லூரியை கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

மட்டக்களப்பு, கரடியனாறு விவசாய பயிற்சிக் கல்லூரியை தொடர்ந்துநடத்த வேண்டுமெனவும் வவனியாவில் விவசாயப் பயிற்சிநிலையம் திறம்பட நடத்தப்பட வேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை எல்லாம் இங்கும் ஸ்ரீ சுவாமிநாத அடிகளார் நடத்த உத்தேசித்துள்ளதாகவும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் பணியைச்செய்ய தமக்குக் கட்டளையென்றும் அடிகளார் கூறி, எல்லாரையும் ஆசீர்வதித்தார்.

இடுப்பில் காஷாயம், மேலே காஷாய உத்தரியம், காதில் தங்கக் குண்டலம், தலையிலும், கழுத்திலும் உருத்திராட்ச மாலைகள் இத் சிவப்பொலிவுடனே ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் திருஞானசம்பந்தர் பாதமலர்த்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவ, நல்லூரில் ஆதீனத்தின் கிளை அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முருகன்படம் இருந்தது. அதற்கு முன்பாக திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளுடைய படத்தை வைத்ததும், முருகனே, ஞானசம்பந்தராக அவதரித்ததாகக் கூறப்படுவது உண்மைதான் என்று தோன்றியது. வாழ்க ஸ்ரீ சுவாமிநாத அடிகளார்.

ஃ ஃ ஃ

தூயவன்காண் நீறு துதைந்த மேனி துளங்கும், பளிங்கனைய சோதியான் காண், தீயவன்காண் தீயவுணர் புரஞ்செற்றான்காண் சிறுமான்கொள் செங்கையெம் பெருமான் தான்காண், ஆயவன்காண் ஆரூரிலம்மான் தான்காண் அடியார்கட் காரமுதமாயினான் காண், சேயவன்காண் சேமநெறியாயினான்காண் சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.

— அப்பர்சுவாமிகள்

---

## 290 வீடுகள் பாதிப்பு

கல்கத்தா, ஆக. 23

உத்தரபிரதேசத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 40 வீடுகள் அழிந்துவிட்டன என்றும் 250 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## "சமஷ்டி சம அந்தஸ்து நமது நிலையான கொள்கை"

மாவிட்டபுரம், செவ்.

''தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளான சமஷ்டி ஆட்சி, தமிழுக்கும் சம அந்தஸ்து, சிங்களக் குடியேற்றத்தைத்தடுத்தல், இந்தியத் தமிழர்களின் உரிமைகளுக்குப் போராடுதல் என்னும் நான்கு கொள்கைகளிலிருந்து வாலிப முன்னணி சிறிதேனும் தவறாது இக் கொள்கைகளுக்காக நாம் தொடர்ந்து போராடுவோம்'' என்று தமிழரசு வாலிப முன்னணியின் பதினோராவது மாநில மகாநாட்டின் அரசியல் மகாநாட்டில் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் திரு. ந. அருணாசலம் கூறினார்.

அவர் தொடர்ந்துகூறியதாவது.

நேற்றுவரை இந்தநாட்டின் பொருளாதாரம், தமிழரின் ஒத்துழைப்பு இல்லாததால் வடக்கும், கிழக்கும் போர்க்கொடி உயர்த்தியதால் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றேதேசிய அரசாங்கம் இதனை உணர்ந்து தமிழ் மக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளது. எனவே இந்த அமைதியான சூழ்நிலையில் எமது பொருளாதாரம் உயர வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிய பின்வரும் வேலைத்திட்டங்களை நிறைவேற்ற நாம் இயன்றவரை முயற்சி செய்வோம் அத்திட்டங்கள் வருமாறு:

(1) காங்கேசன்துறைத் துறைமுகத்தை உடனடியாக அபிவிருத்தி செய்தல்.

(2) பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க படித்த வாலிபருக்கு நிலம் வழங்கி விவசாயத்தை அபிவிருத்தி செய்தல் எதிர்கால வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்படாதவாறு நாட்டின் கல்வித்திட்டத்தை தொழிற்கல்வியாகமாற்றி அமைத்தல்.

(3) மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல் இதுவரை காலமும் இருந்துவரும் பழைய முறைகளினால் ஏற்படும் ஆபத்துகளைபோக்கிப் பெருமளவில் மீன்களைப் பிடிக்கக்கூடிய வகையில் நவீன முறைகளை ஏற்படுத்தி உதவிசெய்தல்.

(4) அந்நியச் செலாவணியைக் குறைக்க கிராமங்கள் தோறும் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவிச் சுய தேவையைப் பூர்த்திசெய்தல். இவ்வாறான திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கத்தை வலியுறுத்துவோம்.

---

## படிப்படியாக எமது உரிமைகள் கிடைக்கும்"

மாவிட்டபுரம், செவ்

''இந்நாட்டின் அவமானச் சின்னங்களாக நாம் வாழக்கூடாது. கல்லடிபட்டு, சொல்லடிபட்டு வளர்ந்த இயக்கமாக இருக்கும் தமிழரசு வாலிபமுன்னணி இயக்கத்தைச் சிதறவிடாது கட்டுக்கோப்புடன் வளர்க்கவேண்டியது வாலிபர்களது கடமையாகும்'' என்று தமிழரசு வாலிப முன்னணி அரசியல் மகாநாட்டிற்கு திரு. செ. இராசதுரை எம். பி. தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தியாகிகள் அரங்கில் நடைபெற்ற இந்த அரசியல் மகாநாட்டில் திரு. இராசதுரை தொடர்ந்து பேசியதாவது:

தம்மை வழிநடத்தும் தலைவர்கள்மீது வாலிபமுன்னணியினர் நம்பிக்கை கொள்ளவேண்டும். அப்படி நம்பிக்கை வைத்தால்தான் நமது இயக்கம் வெற்றி பெறமுடியும்.

அரசாங்கத்தை, சிறுபான்மையினராக இருந்தபோதிலும் கவிழ்க்கமுடியும் என்பதைக் கடந்த 1964ம் ஆண்டிலே நிரூபித்தோம். நம்மால் அரசாங்கத்தை உருவாக்கமுடியும் என்பதை நாம் இப்போது காட்டியிருக்கிறோம். உரிமைகள் படிப்படியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அரசாங்கத்துடன் இணைந்துள்ளோம். போராடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமானால் அதற்கு வாலிப முன்னணி தயாராக இருக்கவேண்டும்.

வாலிப முன்னணி இயக்கத்தினர் கட்சியின் நிழலாக நின்று கட்சிக்கு உறுதுணையாக இருந்து மிகமிக விழிப்புடனும் துடிப்புடனும் உழைக்கவேண்டும். உத்தியோக உயர்வு, பதவி ஆசை ஆகியவற்றுக்கு அடிமையாகிப் பாதையிலிருந்து விலகிச் சென்று, இந்நாட்டின் அவமானச் சின்னங்களாக மாறக்கூடாது தலைநிமிர்ந்து தரணியிலே பவனிவரக் கூடிய செயல்திறமை வாலிபர்களுக்கு வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் மறக்கக்கூடாது.

தமிழரசுக்கட்சி உருவாக்கி வளர்த்த வடக்கு, கிழக்கு மலைநாடுகளின் இணைப்புப் பாலத்தை உடைத்து எறியச் சிலர் வழிவகுக்கின்றனர். திருக்கேதீச்சரம் அணுவணுவாக பறிபோய்க்கொண்டிருக்கிறது. அதனைக் காப்பாற்றப்பாடுபட வேண்டும். தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு 18 எம். பி.க்கள் பரிபூரண ஆதரவு தருகின்றனர். நான்கு முஸ்லிம் எம். பி.க்கள் ஒத்துழைப்பு தந்துவிட்டனர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழரசுக்கட்சியின் கடந்தகால வரலாறுகளை விரிவாக விளக்கினார். தமிழரசு வாலிப முன்னணியினர் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

ஜனாப் மௌலானா மௌலானாவும் பேசினார்.

---

## தமிழர்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

### இதனால் ஆகாதது எதனாலும் ஆகாது

மொழி, மதம், கலாசாரம் ஆகியவற்றை விட இன்று இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் மிக முக்கியமான பிரச்னைகளாக இருப்பவை வேலையில்லாத் திண்டாட்டமும் வாழ்க்கைச் செலவு உயர்வுமே. இப் பிரச்னைகள் இரண்டும் எடுத்த எடுப்பிலேயே தீர்த்துவிடக் கூடிய சுலபமான பிரச்னைகளல்ல. அரசாங்கமும் மக்களும் ஐக்கியமாக இருந்தால்தான் இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும். அரசாங்கம் பிளவு பட்டிருந்தாலும் மக்கள் பிளவுபட்டுநின்றாலும் இப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. பிளவுபட்டுள்ள அரசாங்கமும் பிளவுபட்டு நிற்கும் மக்களும் எப் பிரச்னைகளையும் திருப்தியாகத் தீர்க்க முடியாது.

பத்துவருடங்களின் பின் இப்பொழுதுதான் முதல் தடவையாக ஒற்றுமையான அரசாங்கமும், ஒற்றுமைகொண்ட மக்களும் இந்நாட்டிலுள்ளனர். ஐக்கியம் ஏற்பட்டபின் எப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பது கடினமல்ல.

---

## ஒன்பது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூவர்ணக்கொடிகள் பறந்துகொண்டிருந்த சைக்கிள்களில் முன்செல்ல அவர்களின் பின்னே மோட்டார் கார்கள் செல்ல அதன்பின் அமைச்சர் ஜயவர்த்தனவும் தமிழரசுத் தலைவர்களும் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

வீதியின் இருமருங்கிலும் ஆண்களும், பெண்களும், சிறுவர், சிறுமியருமாகத் திரண்டுநின்று அமைச்சரை வரவேற்றனர். அமைச்சர் மலர்ந்த முகத்துடன் அனைவருக்கும் இரு கரம்கூப்பி வணக்கம் தெரிவித்தார்.

---

## வட்டுக்கோட்டைத் தொகுதியில் ராஜாங்கமந்திரி பவனி

சுழிபுரம், செவ்வாய்

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் அவருடன்வந்த குழுவினருக்கும் வட்டுக்கோட்டைத்தொகுதி மக்கள் இரண்டு இடங்களில் பெரும்வரவேற்பை அளித்தனர்.

காரைநகர் துறையிலிருந்து சங்கானை பட்டின சபை வரை மக்கள் வீதியின் இரு கரையிலும் கூட்டம் கூட்டமாக நின்று அமைச்சரை வரவேற்றனர். வட்டுக்கோட்டை பாராளுமன்ற [illegible] அமிர்தலிங்கம் அமைச்சரை வரவேற்று மகிழ்ச்சியைத்தெரிவித்தார். அதேபோல் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் வட்டுக்கோட்டை பா. உ. திரு. அ. அமிர்தலிங்கத்தின் தேர்தல் வெற்றியையும் திறமையையும் பாராட்டி பெருமிதம் தெரிவித்தார்.

மக்கள் மிகுந்த ஆரவாரம் செய்து பாராட்டுத் தெரிவித்தனர். அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. மு. திருச்செல்வமும் வந்திருந்தார்.

---

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலக்கியம் இல்லாமல் அரசியல் இல்லை"

## வாலிப முன்னணி இலக்கிய மகாநாட்டில் பண்டிதர் இரத்தினம்

## "ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அரசியல்வாதிகள் உதவவேண்டும்"

—கனக செந்திநாதன்,

மாவிட்டபுரம், செவ்.

"இலக்கியமின்றி அரசியல் இல்லை. ஓரினத்தின் ஆணி வேராக இலக்கியம் விளங்குகிறது. நமது முன்னைய தலைவர்கள் தவறுவிட்டார்கள் எனின் அவர்கள் இலக்கியத்தைநன்ருக அறியவில்லை. அல்லது இலக்கியத்தின் கருத்துக்களை நன்ருக உணர்ந்து கொள்ளவில்லை என்றே எண்ணவேண்டும்." இளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மாவிட்டபுரம் தமிழரசு வாலிப முன்னணியின் இலக்கியப் பேரவைக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

தமிழரசு வாலிப முன்னணியின் பதினோராவது மாநில மகாநாட்டில் இடம்பெற்ற இலக்கியப் பேரவைக்குப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை வகித்தார். விபுலானந்தர் அரங்கில் நடைபெற்ற இம் மகாநாட்டில் திரு. இரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசியலும் இலக்கியமும் ஒன்ருேடொன்று இணைந்தவை. நமது நீண்டகால வரலாற்றைச் சற்று நோக்கினுல் பல உண்மைகளை அறிந்துகொள்ள முடியும். அரசர்களும் புலவர்களும்ஒன்றுபட்ட வாழ்க்கையை வாழ்ந்தார்கள். இதனுல்தான் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்கள். முன்னைய புலவர்கள் உறுதியில்லாதவர்களாக, கொள்கையற்றவர்களாக இருக்கவில்லை.

அரசியலின் உண்மையான தத்துவம் என்ன என்பதனை உணர்ந்தவர்கள்தமிழர்களே ஒரு நாட்டுக்கு நிலவளம் இருக்கலாம், நீர்வளம் இருக்கலாம். உணவு வசதிகள் இருக்கலாம், இருப்பினும் மன்னன் ஒருவனது கையிலே தான் உலகம் தங்கியுள்ளது என்பதனை சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடியும்.

தமிழர்கள் தாம் இழந்த குடியுரிமை, மண் உரிமையைப்பெறப் பாடுபடுகிருர்கள். நீதியிலே கொள்கையிலே பற்றுடையவர்களாக இருப்பவர்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் பெரும்பான்மையினரை எதிர்த்து வெற்றி காணமுடியும் என்பதனையும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

அரசியலிற் போராடி சோர்வடையும்போது இலக்கியம் ஊக்கம் தருகிறது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் போரிட்டு வெல்ல அறப்போர் வேண்டும். அறப்போரில் உண்மையான வீரனே ஈடுபடுவான். அறப்போர் பற்றி மகாத்மா காந்தி கூறிய கருத்துக்களைச்சிந்திக்கவேண்டும்.

உண்மையாக நாம் இலக்கியங்களைப் படிக்கவேண்டும் தாய் மொழி மூலம் இலக்கியத்தைப் படித்தால்தான் சுவைக்கமுடியும் இதனுல் தான் பல்கலைக்கழகத்திலுங்கூட தாய் மொழி மூலம் கற்பிக்கப்படவேண்டும் என்று கூறப்படுகிறது. சிறந்த பண்பாட்டைப் பின்பற்ற இலக்கியம் பயன்படும். வாழ்க்கையின் பல துறைகளிலும் இலக்கியம் சேரும். இலக்கியமே வாழ்வு; வாழ்வே இலக்கியம் என்ற நிலை உருவாகிவிட்டது.

தமிழ் இனம் உழைப்பால் உயர்ந்த இனம். ஆனல் இலங்கையில் உழைப்பின்றி தாழ்வு அடையும் இனம் தமிழினமாகவே காணப்படுகிறது. கைத்தொழில், விவசாயத்துறைகளில் இளைஞர்கள் ஈடுபடத்தயங்க அந்நியர் ஆதிக்கத்தில்ஏற்பட்ட மனேபாவமே காரணம்.

சமஷ்டி ஆட்சி கிடைத்தால் நாம் எப்படிவாழ முடியும் என்று சிலர் கேட்கிருர்கள். அவர்கள் நமதுபழைய இலக்கியங்களைப் படிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடல்படு திரவியம் ஒன்றுமட்டுமே இலங்கையைச் செம்மையாக வாழவைக்கப் போதுமானது. இங்கு விளையும் உப்பு பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுவதனுல் கிடைக்கும் வருமானம் நமது வாழ்வுக்குப் போதுமானது.

### அரசியல் வாதிகள் உதவவேண்டும்

இரசிகமணி கனக. செந்திநாதன் பேசியதாவது:

ஈழத்து எழுத்தாளர்கள் நல்லதரமான நூல்களை எழுதிவெளியிட இன்றைய அரசியல்வாதிகள் உதவவேண்டும். இன்றைய எழுத்தாளர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய இருஅம்சங்களை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியது அரசியல் வாதிகளது கடமையாகும்.

பத்து ஆண்டுகளுக்குமுன் ஈழத்துக்கு தமிழகத்திலிருந்து வந்த எழுத்தாளர் ஒருவர் ஈழத்தில் எழுத்துத்துறை பத்துஆண்டுகள் பின்தங்கிக் காணப்படுவதாகக் கூறிச்சென்ருர். அப்போது ஈழத்து எழுத்தாளர் வெளியிட்ட நூல்கள் மொத்தம் ஐந்து மட்டுமே. ஆனல் இன்றோ நிலைமை மாறிவிட்டது. வருடத்துக்கு ஐம்பது நூல்கள் எல்லாத்துறைகளிலிருந்தும் வெளிவருகின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் 300 நூல்கள் வெளியாகிவிட்டன. இவற்றை எல்லாம் வெளியிட எழுத்தாளர்கள்பட்ட கஷ்டங்கள் பல.

இந்த முந்நூறு நூல்களில் காதல் கதைகளோ, குப்பை கூழங்களோ இல்லை. மனித வாழ்க்கையின் பிரச்சினைகளை அலசி ஆராய்கின்றன. ஈழத்து எழுத்தாளர்கள் தமது கஷ்டங்களிலிருந்து விடிவுகாண முயற்சிப்பது எல்லோரதும் கடமையாகும்.

இலங்கை எழுத்தாளர்களின் தரமான படைப்புக்களைத் தமிழகத்திலும் விற்பனை செய்ய உள்ள இந்திய அரசாங்கத் தடையைப் போக்க அரசியல் வாதிகள் முயலவேண்டும். இது அவர்களுடைய கடமையாகும்.

தமிழகத்திலிருந்து இங்கு வரும் ஏராளமான தரமற்ற நூல்களைத் தடைசெய்ய வேண்டும். அப்போதாயினும் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை மக்கள் வாங்கிப்படிக்கக்கூடும்.

சாகித்திய மண்டலம் அச்சிட்டு வெளியான நூல்களுக்குப் பரிசு அளிக்காமல் கையெழுத்துப் பிரதிகளை வாங்கிப்பரிசுக்குரியவற்றைத் தேர்ந்து எடுத்து பரிசு பெற்ற பிரதியை அச்சிட்டு எழுத்தாளருக்கு வழங்க வேண்டும்.

தரமற்ற நூல்களைத்தடைசெய்தல், சாகித்திய மண்டலப்பரிசளிப்பில் மாறுதல் என்ற இரு அமைப்பு மூலம் தான் ஈழத்து எழுத்தாளர்களுக்கு விமோசனமளிக்க முடியும்."

திரு. த. இராசலிங்கம் பேசியதாவது:

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நிலவும் சாதிப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்படுவது அவசியம். தமிழர்களின் முன்னேற்றத்துக்குப்பெரும் தடையாக உள்ள இப்பிரச்னைக்கே முதலில் தீர்வு வேண்டும். சிறுபான்மையினராக இந்தநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தம்முள் சிறுபான்மையினராகச் சிலரை ஒதுக்கிவைத்திருப்பது கவலையளிப்பதாகும். தமிழ்பேசும் மக்கள் தம்மத்தியில் நிலவும் தீண்டாமையை ஒழித்து ஒன்றுபட்டு சமுதாய முன்னேற்றத்துக்குப் பாடுபடுதல் வேண்டும்."

### திருக்குறள் வழிகாட்டுகிறது

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேசுகையிற் கூறியதாவது:

தமிழர்கள்வாழவேண்டிய வழி வகைகளைத் திருக்குறள் வகுத்துத்தந்துள்ளது. திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறி நின்று பயன்பெற வேண்டும். வள்ளுவன் காட்டும் வழி சமாதானத்துக்குரியது! அன்பு மயமான உலகுக்கு இட்டுச்செல்லக் கூடியது.

திரு. மயில சிவசண்முகம், திரு. செம்பியன் செல்வன், திரு. கு. வி. செல்லத்துரை முதலாஞேரும் பேசினர்.

---

## வேலணை நால்வர் மடம்

வேலணை, திங்கள்

வேலணை நால்வர் மடத்தில் 25-ந் திகதி வியாழக்கிழமை காலை 10மணிமுதல் 12 வரை ஸ்ரீநடராஜப்பெருமான்சிவகாமி அம்பாள்சமய குரவர் நால்வர் இவர்களது திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்படும். முதல்நாள் 24-ந் திகதி புதன் மாலை 7 மணிக்கு கிரியாரம்பமும் சமயப்பிரசங்கமும் நடைபெறும்.

---

## இசை ஆசிரியருக்கு பொற்கிழி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நல்லூர் இசை ஆசிரியர் கே. சபாரத்தினம் பல்லாண்டாக இசை உலகிற்குச் செய்துவரும் சேவையை முன்னிட்டு அன்ஞரது மாணவர்களும். இசை அபிமானிகளும் அக்டோபர் மாத இறுதியில் அவருக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

---

## தூக்குக் காவடி

வல்வெட்டித்துறை, செவ்வாய்

செல்வச்சந்நிதிவருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. வருகிற வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும். அன்று காலை 10 மணிக்கு வழமைபோல்புதுக் ... ராசா தூக்குக்காவடி எடுப்பார்.

---

## 'மாணவர்களே! உடற்தைரியமும் நல்ல உள்ளமும் பெறுவீர்களாக'

### வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் டாக்டர் சச்சார் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

"இங்கு என் முன் வீற்றிருக்கும் மாணவர்களின் கட்டுப்பாடும் ஒழுங்கும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன பிள்ளைகளே. நீங்கள் உடல் தைரியமும், நல்ல உள்ளமும் படைத்தவர்களாக இருக்கவேண்டும். சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையை உதாரணமாகக் கொண்டு உங்கள் வாழ்க்கையை உருவாக்குங்கள்."

இவ்வாறு இன்று காலை வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு விஜயஞ்செய்த இந்தியத் தூதுவர் டாக்டர் சச்சார் கூறினுர்.

டாக்டர் சச்சார் கல்லூரிக்கு வந்து சேர்ந்ததும், கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகனும் மற்ற ஆசிரியர்களும் வரவேற்றனர். மாணவ மாணவிகளின் கூட்டுப்பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

டாக்டர் சச்சாரை வரவேற்றுப் பேசுகையில் "1917ம்ஆண்டு தொடக்கம் இக்கல்லூரி நாட்டுக்குச் சேவை செய்துவந்துள்ளது. 1960ல் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றது.

இந்திய தூதராலயத்துடன் இக்கல்லூரிக்கு நீண்டகாலத் தொடர்பு இருந்துவந்திருக்கிறது. முதலாவது இந்தியத் தூதுவர் திரு. வி. வி. கிரி தொடக்கம் இன்றுவரை இத்தொடர்பு நீடித்துவந்திருக்கிறது.

உங்களையும் எம்மத்தியில் வரவேற்பதில் நாம்மகிழ்ச்சி அடைகிருேம். உங்களது வாழ்க்கை எமக்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது" என்று திரு. ச. அம்பிகைபாகன் குறிப்பிட்டார்.

டாக்டர் சச்சார் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது

"பெருமை மிக்க பாரம்பரியத்தைக் கொண்ட இக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களை சுவாமி விவேகானந்தர் போன்ருேரின் வாழ்க்கையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்கிறேன் ஆண்பிள்ளைகள் மட்டுமின்றி, பெண்பிள்ளைகளும் உடல் தைரியத்துடன் இருக்க வேண்டும். உடல் தைரியமாக இருப்பதற்கு நல்ல உள்ளம் முதலில் தேவை.

மாணவர்களே நான் உங்களுக்கு இரண்டு விஷயங்கள் கூறவிரும்புகிறேன். ஒன்று, கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருங்கள். இரண்டு, எச்சந்தர்ப்பத்திலும் அந்த நம்பிக்கையை நீங்கள் இழக்கக்கூடாது. உலகில் எது உங்களைக் கைவிட்டாலும், கடைசிப் புகலிடமாக விளங்கக்கூடியவர் கடவுளே.

உங்கள் எதிர்காலம் இக்கல்லூரிக் கட்டடத்தினுள் தான் அமைக்கப்படுகிறது. ஆகவே, நீங்கள் உங்கள் உடலையும் உள்ளத்தையும் நல்லமுறையில் பேணிக்காக்கவேண்டும்.

எமது இரு நாடுகளிடையேயும் நீண்டகாலமாக கலாச்சார, நல்லுறவுத் தொடர்புகள் இருந்துவந்திருக்கின்றன. இந்தியாவும் இலங்கையும் இரு வேறு அரசியல் நாடுகள். இந்நாடுகளில் வாழும் மக்கள் சொந்த நாட்டுக்கே விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனல் இந்த உண்மை எந்தவிதத்திலும் எமதிரு நாடுகளிடையே கலாச்சார, நல்லுறவுத் தொடர்புகளை வளர்க்கத் தடையாக இருக்கமுடியாது என்னுல் இயன்றவரை எனது சிறிய அளவில் இத்தொடர்பை மேலும் வளர்க்க நான் பணியாற்றுவேன்."

டாக்டர் சச்சார் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையாகச் சில நூல்களைக் கல்லூரி நூல்நிலையத்தில் வைப்பதற்கெனக் கையளித்தார். கல்லூரியின் சார்பில் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

---

## வைதாரையும் முருகன் வாழவைப்பதேன்?

### சுன்ஞகத்தில் கி. வா. ஜ. விளக்கம்

சுன்ஞகம், செவ்வாய்

தமிழில் வைதாரையும் வாழவைப்பானும் முருகன். ஏன்? வள்ளி முதலில் முருகனை 'ஏடா மூடா போடா' என்று தமிழில் திட்டினுள். அந்த வசையும் முருகனுக்கு மிக இனிமையாக இருந்தது. வேறு யாரும் தமிழில் திட்டினுலும் முருகனுக்கு தன் வள்ளியின் நினைப்பு வந்துவிடுமாதலால் தன்னைத்திட்டிய வள்ளியை வாழவைப்பதுபோல் தமிழில் தம்மையார் வைதாலும் வாழவைக்கின்ருன் முருகன்."

என்று ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், சுன்ஞகம் சிவன் கோவிலில் நேற்று இரவு "அருள் தமிழ்" எனும் பொருள்பற்றிப் பேசிய போது குறிப்பிட்டார். ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

தமிழில் அருட் பாடல் செல்வம் ஏராளமாக இருப்பதாயும், அவற்றைப் படிப்பதால், உள்ளத்துக்கு மட்டுமன்றி உயிருக்கும் இன்பம் பயப்பதாகவும் கூறி கந்தரலங்காரத்திலிருந்து சில பாடல்களுக்கு அருமையான விளக்கம் தந்தார்.

சுன்ஞகம்மக்கள் சார்பாக ஆசிரியர் திரு. மா. குமாரசாமி அழகான வாழ்த்துப்பாபாடி திரு. கி. வா. ஜவுக்கு அளித்தார். 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. சிவப்பிரகாசம், வரவேற்றுப்பேசினுர். திரு. வல்லிபுரம் பொதுமக்கள் சார்பாக தங்கப் பதக்கமொன்றணிவித்தார். சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் 'அருள் தமிழ்' பேசி, மக்கள் மனதைக் கவர்ந்தார்.

நான்முகவன் தம்தலையில் எழுதியுள்ள எழுத்தையும், ஆறுமுகவன் தன்மென்மையான திருப்பாதங்களால் அழித்து நம்வினைகளை யெல்லாம் போக்கிவிடுவான் என்ருர்.

---

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, செவ்,

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி விஜயம்

## கிரிக்கெட் அபிமானிகளுக்கு அரிய சந்தர்ப்பம்

கொழும்பு, செவ்வாய் கரி சோபேர்சின் தலைமையில் பல வெற்றிகளை இங்கிலாந்தில் ஈட்டிய மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டி, அடுத்த வருடத் தொடக்கத்தில் இலங்கைக்கு வருவார்கள் எனத் தெரிகிறது.

ஜனவரி 21, 22, 23ம் திகதிகளில் இலங்கைக்கெதிராக மூன்று நாள் 'டெஸ்ட்' ஒன்று விளையாடுவார்கள்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் காரியதரிசி மேஜர் டென்னிஸ் ஹப்புகலை, இந்த மேற்கிந்திய விஜயத்தை ஊர்ஜிதம் செய்தார்!

இங்கு வரும் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியில் இங்கிலாந்தில் விளையாடி வரும் எல்லா 'ஸ்டார்'களும் இருப்பர். இவர்கள் இங்கிலாந்தை ஐந்து 'டெஸ்ட்' போட்டிகளில் 3—1 ஆகத் தோற்கடித்தனர். ஒரு 'டெஸ்ட்' வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்கிந்தியக் கோஷ்டி இங்கு வருவதால், இலங்கையிலுள்ள சகல கிரிக்கெட் விசிறிகளுக்கும் தமது அபிமானத்துக்குரிய உலக கிரிக்கெட் 'சாம்பியன்'களைக் காணும் பாக்கியம் கிட்டுகிறது. அதிவேகமாகப் பந்தை வீசும் ஹோல், கிரிபித், சக்தி வாய்ந்த துடுப்பு வீரரான நேர்ஸ், புச்சர், கவர்ச்சிக் கிரிக்கெட் விளையாடும் கான் ஹாய், கொன்ருட் ஹண்ட், தலைவர் கார்பீல்ட் சோபேர்ஸ் எல்லா வீரரையுமே பார்த்து மகிழ, கிரிக்கெட் ஆதரவாளருக்கு நல்ல சந்தர்ப்பமாக இவ்விஜயம் அமையும்.

# க்ஷயரோக சிகிச்சையில் புதிய முறை

யாழ்ப்பாணம், புதன் இலங்கையில் மிகக் கூடிய காசநோய் பீடிக்கப்பட்டவர்கள் வசிக்கும் யாழ்ப்பாணப்பகுதியில் அரசாங்கம் இதுவரை கையாண்டுவந்த காசநோய்ச் சிகிச்சை முறையை மாற்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபார்சின்படி ஒரு புதுமுறைச் சிகிச்சையைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இப்புதிய முறை வருகிற அக்டோபர் மாதந்தொடக்கம் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிகிறது.

இதுவரை கையாண்டு வந்த சிகிச்சை முறைப்படி முற்றிய பருவத்தில் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் தினமும் மருந்து உட்கொள்ளக்கூடிய வகையில் மருந்து விநியோகிக்கப்பட்டு வந்தது. இது வெளிநோயாளர்களுக்கு உரிய சிகிச்சையாகும்.

இப்புதுமுறைச் சிகிச்சை உலக நாடுகள் சுகாதார ஸ்தாபனத்தினால் தென்னிந்தியாவில் பங்களூரிலுள்ள காசநோயாளரமில் பரிசோதனை செய்துபார்க்கப்பட்டதாகவும், சென்ற 4 மாதகாலமாக இலங்கையில் குருநாகலைப் பகுதியில் மட்டும் பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்டுவருவதாகவும் தெரிகிறது.

இப்புதுமுறையின்படி ஆரம்பபருவத்திலுள்ள நோயாளரோ அல்லது முற்றிய பருவத்திலுள்ள நோயாளரோ வாரத்தில் இருமுறை நேரில் ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சைபெற்றுக் கொள்ளவேண்டும்.

# சுவீப் மீண்டும் வடபகுதியில்

மாவிட்டபுரம், செவ். இலங்கை தேசிய சுவீப் சீட்டிழுப்பு இரண்டாவது தடவையாக வடபகுதியில் குலுக்கப்படவிருக்கிறது.

தேசிய சுவீப்பின் 106-வது இலக்கச் சீட்டிழுப்பு அடுத்த மாதம் 8-ம் திகதி நல்லூரில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில்

# கொலை வழக்கு:

யாழ்ப்பாணம், புதன் உடுவில் கொலைவழக்கு மீதான தீர்ப்பு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டு வந்த உடுவில் கொலை வழக்கு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

# ஐந்தாவது 'டெஸ்'டில் இங்கிலந்து வெற்றி

லண்டன், ஆக. 23 இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியர்களுக்குமிடையே நடைபெற்ற இறுதியும் ஐந்தாவதுமான கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியில், இங்கிலாந்து ஒரு இனிங்ஸினாலும், 27 ரன்களினாலும் வெற்றியீட்டியது. மற்ற நான்கு போட்டிகளில், ஒன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மூன்று 'டெஸ்ட்'டுகளில் மேற்கிந்தியர்கள் வெற்றியீட்டினர்.

ஸ்கோர் விபரம

இங்கிலாந்து: முதல் இன்னிங்ஸ்: 527

மேற்கிந்தியர: முதல் இன்னிங்ஸ்: 268. இரண்டாவது இன்னிங்ஸ்: 232.

# எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, திங். கெருடாவிலைச் சேர்ந்த சிற்றம்பலம் துரைராசா என்பவர் தனது மனைவி அரியம்மாவை கடந்த மே மாதம் 25-ந் திகதி கிணற்றில் தள்ளி விழுத்தி கொலை செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையில் சாட்சிகள் முரண்பாடாக இருப்பதாக கூறி எதிரியை நீதிபதி சுற்றவாளியாகக் கண்டுவிடுதலை செய்தார்.

# கார் - பஸ் மோதல்

## சிறுவன் காயம்

சங்கானை, செவ்வாய் யாழ்ப்பாணத்திலிருந்து சித்தன்கேணியை நோக்கி வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றும் சித்தன்கேணியிலிருந்து வட்டுக்கோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் கார் ஒன்றும் வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலுக்கு அண்மையில் மோதிக்கொண்டதன் விளைவாக காரிலிருந்த நடராசா உதயகுமார் (6 வயது) என்னும் சிறுவன் காயமடைந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சங்கானைப் பொலிசார் விசாரணை நடத்தினர்.


அவள் திறமை திருப்தியாயில்லை என்றார்கள்




அவளோ முன்பெல்லாம் வெகு கெட்டிக்காரி... இப்போது தான் சோர்ந்து களைத்துக் காணப்படுகிருள். டாக்டரிடம் காட்டினால் நல்லது என்று நினைத்தேன்


"குழந்தை வளர வளர அதிக சக்தி பெறுவதற்கு, அதிக போஷாக்கு வேண்டும்" என்ருர் டாக்டர். "நான் ஹோர்லிக்ஸை சிபார்சு செய்கிறேன்"




இப்போது எவ்வளவோ மாற்றம். அவள் உற்சாகத்துக்குக் கங்கு கரையில்லை... கேள்விகளுக்கு முதலில் பதில் அளிப்பது அவள் தான். ஹோர்லிக்ஸால் பிரச்சினை தீர்ந்தது

ஹோர்லிக்ஸ் பருகியபின்... புத்திவன்மை தான் என்னே!

வளரும் குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது ஹோர்லிக்ஸ். அவர்கள் விரைவாகச் சக்தியை விரயம் செய்வதால், அதை மீட்கப் போதுமான போஷாக்கு வழக்கமான உணவிற் கிடைப்பதில்லை. அவர்களுக்கு எது தேவையோ அதைத் தருகிறது ஹோர்லிக்ஸ். சக்தியாக மாறும் சாரமுள்ள கூடுதல் போஷாக்கை அது தரும். ஏனெனில் உடம்பில் இலகுவாகச் சேரும் வண்ணம் விசேஷ முறையில் மாற்றப்படும் உன்னதமான உணவுப் பொருள்களால் அது தயாரிக்கப்பட்டது. குழந்தைகள் உறுதியும் வலிமையும் பெற்று வளரச் செய்யும் ஹோர்லிக்ஸையே டாக்டர்களும் சிபார்சு செய்கிருர்கள். வளரும் உடம்பின் தேவையை வழங்கி, படிப்புக்கும் விளையாட்டுக்கும் வேண்டிய அதிக சக்தியை அது அளிக்கும். உங்கள் குழந்தைக்குத் தேவை ஹோர்லிக்ஸ்.




கோதுமை மா, மால்ட் பார்லி போஷாக்குச் சாரம் கொண்ட பூரண ஆடைப் பசும் பால்



ஹோர்லிக்ஸ்

அதிக சக்தி ஊட்டுகிறது

ஏக விநியோகஸ்தர்கள்: மில்லர்ஸ் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2வருடத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னொலி மக்களின் மனங்களை அரசாங்கத்திடம் திருப்புவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் ஜனநாயக நாடுகளில் மக்களின் அறிவை விருத்திசெய்வதற்காகவே வானொலி பயன்படுத்தப்படுகின்றது.

### நல்லுறவும் நல்லெண்ணமும்

நாட்டின் மக்கள் மத்தியில் சௌஜன்யம், நல்லெண்ணம், நட்புறவு ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையிலேயே வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படவேண்டும்.

ஒரு நாட்டு மக்கள் மத்தியில் நல்லுறவும். நல்லெண்ணமும் சௌஜன்யமும் ஏற்படுத்தும் வகையிலேயே சமீபத்தில் பிரதம மந்திரி கிழக்கு மாகாணத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்தார். அந்த அடிப்படையிலேயே நானும் இப்போது வடமாகாணத்துக்கு விஜயம்செய்திருக்கின்றேன்.

1956-ம் ஆண்டுக்கும் 1966-ம் ஆண்டுக்கும் இடையில் ஏற்பட்ட புண்கள் இன்னும் ஆறவில்லை. மேல்எழுந்தவாரியாகப் பார்க்கும்போது அந்தப் புண்கள் மாறிவிட்டதாகவே தோன்றுகின்றன. ஆனல் உட்புறத்தில் அவை இன்னும் ஆறவில்லை. இந்தப்புண்களை சுலபமாக ஆற்றிவிடக்கூடிய குறுக்குவழிகளில் நாங்கள் நம்பிக்கை வைக்கவில்லை. உங்கள் மக்களும் எங்கள் மக்களும் இப்போது ஒத்துழைப்பதின் மூலம் தமக்குள் இருக்கும் வேற்றுமைகளைக் களைந்துகொள்ள வேண்டும்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த வானொலி அலை நிலையம் நடைமுறையில் சாத்தியமாகும் என்று நம்புகின்றேன்.

# "வாழும் நாட்டுக்கு விசுவாசமாக இருங்கள்"

## யாழ்ப்பாண இந்தியருக்கு டாக்டர் சச்சார் புத்திமதி

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினராலும் வேறு எந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவழியினராலும் அவர்கள் வாழும் நாட்டுக்கு விசுவாசமாழவேண்டும் என்று இலங்கையிலுள்ள இந்தியஹைகமிஷனர் டாக்டர் பீம்சென்சச்சார் யாழ்ப்பாணம் வடக்கு வீதியிலுள்ள நேருஜி வாலிபர்சங்கத்தின் நூல்நிலையத்தை நேற்று திறந்து வைத்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

இலங்கையில் இந்தியாவில் இருந்து சிலர் சட்டவிரோதமாகக் குடியேறுகிறார்கள் என்றும் இத்தகைய சட்டவிரோதக் குடியேற்றத்தை இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவழியினர் ஒருபோதும் ஆதரிக்கக்கூடாதென்றும் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு இங்குள்ள இந்திய வம்சாவளியினர் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுமென்றும் டாக்டர் சச்சார் கேட்டுக்கொண்டார். இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இங்கு வந்து குடியேறுவது இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் என்றும் டாக்டர் சச்சார் கூறினர்.

மற்றும் பலரும் பேசினர்.

## சுவாமிநாததம்பிரான்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமிகளிடம் ஆசிபெற ஏராளமானோர் காத்து நின்றனர்.

ஸ்ரீசுவாமிநாதத்தம்பிரானின் அருட்கோலம் எல்லோருடைய மனதையும் தொட்டது. தமிழ்மறை ஓதும்போதும் குழுமிநின்ற மக்கள் மனதில் புளகாங்கிதம் ஏற்பட்டது.

முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், மாநகரசபை உறுப்பினர் ஆ. துரைராஜசிங்கம், திரு. திருநாவுக்கரசு முதலானவர்கள் தம்பிரானை வரவேற்றனர்.

மலர்களினால் அலங்கரிக்கப்பட்டஜீப்பில்ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் நல்லூர் முருகன் ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

வியாழக்கிழமை மாலை 4 மணியளவில்ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பியான் சாத்தையர்மடம் ஸ்ரீகற்பவிநாயகர் ஆலயத்திலிருந்து காங்கேசன்துறை வீதிவழியாக வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தையடைந்து, வீதிவலம்வந்து சுமார் 5-30 மணியளவில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் வரவேற்கப்பட்டுத் தமது முதலாவது பிரசங்கத்தை நிகழ்த்துவார். பிரபல சைவப் பெரியார்கள் அன்னருக்குப் பாராட்டுரை வழங்குவர்.

## மாக்கியவல்லிக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமை நமக்குண்டு. தமிழ்பேசும் மக்களது உரிமைகளைத் தரமறுத்த அரசாங்கத்தை 1960ல் தோற்கடித்தோம். தமிழர் உரிமைகளைத் தர முன்வந்த அரசாங்கம் ஒன்றினை உருவாக்கினோம்.

ஒருமொழிச்சட்டத்தினால் உருக்குலைந்துபோன இலங்கையை வளம்படுத்துவதில் தேசிய அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அரசியல் விடுதலை என்பது நினைத்தவுடன் கடையில் பெறக்கூடியபொருள் அல்ல.

காலத்துக்குக்காலம் படிப்படியாக பல கட்டங்களைக் கடந்துதான் அரசியல் விடுதலையைப் பெற வேண்டும். போராட்டம் வேண்டிய காலத்தில் போராட்டமும் சமாதான காலத்தில் சமாதானமும் இடம்பெற வேண்டும்.

இந்நாட்டில் நிலவிவந்த பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்து சர்வாதிகார ஆட்சி ஏற்படாதவாறு தடுத்து நிறுத்திய பெருமை திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு உண்டு. அவரது அரசியல் தீர்க்கதரிசனமான செயல்கள்தான் இன்றைய ஜனநாயகம் பாதுகாக்கப்படக் காரணமாகும். பார்லிமென்டில் பத்திரிகை மசோதாக்கள் கொண்டு வரப்பட்ட போதெல்லாம் அவற்றை தர்க்கரீதியான ஆட்சேபனைகளுடன் நிராகரிக்கக்காரணமாக இருந்தவரும் அவரே. தமிழ்பேசும் மக்களின் நல்லெண்ணத்துக்கு உரியவரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் வருகை நமக்கு புதிய உணர்ச்சியையும் நம்பிக்கையையும் தந்துள்ளது.

## மொழிவிஷயத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் இரத்தினம் இதற்கு உதாரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையிலிருந்து வந்த கடிதம் ஒன்றை வாசித்துப் புரிந்து கொள்வதற்காக ஒருவர் 16 மைல் தூரம் பிரயாணம் செய்ய நேரிட்டதென்ற விபரத்தைத் தெரிவித்தார்.

இதற்கு உதவி அமைச்சர் திரு. டி. பி. அத்தப்பத்து பதிலளித்துப் பேசுகையில் மொழி விஷயத்தில் தமிழருக்கு மட்டுமல்ல சிங்களவருக்கும் கஷ்டங்கள் இருக்கின்றன என்றார்.

திரு. அத்தப்பத்துமேலும் கூறியதாவது:

மொழி விஷயத்தில் இரண்டு சாராருக்கும் கஷ்டங்கள் இருக்கவே செய்கின்றது. இதனை ஒரு அரசியல் பிரச்சினையாகக் கருதாமல் தேசிய ரீதியில் நோக்குவதே நல்லது. இப்பிரச்னை காலகதியில் தீர்ந்து விடும். இந்த மொழி விஷயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எத்தவித சிக்கல்களையும் ஏற்படுத்த மாட்டாது என்பதை நான் உறுதிப்படுத்திக் கூறுகிறேன்.

அம்பாந்தோட்டை பெலியத்தை ஆகிய எனது [illegible]

## தமிழர் சிங்களவருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூமாலைகளின் பாரத்தையும் மக்களின் அன்பு வெள்ளத்தையும் சுமந்ததால் ஏற்பட்ட களைப்பை சிறிது தணித்துக்கொள்ளும் பொருட்டு அமைச்சர் திரு. ஜயவர்த்தன 'வீடு'போல் அலங்கரிக்கப்பட்டிருந்த இரதத்திலிருந்து இறங்கி வேறொரு காரில் காங்கேசன்துறை விருந்தினர் விடுதிக்குச் சென்று சிறிதுநேரம் ஓய்வெடுத்துக்கொண்டார். இதன்பின் இரவு 10 மணிக்கு பொதுக்கூட்ட மேடைக்கு அவர் வந்துசேர்ந்ததும் மக்கள் கரகோஷம்செய்து தெரிவித்த மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணதிரச் செய்தது.

மேடையில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. செ. இராசதுரை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

மக்களின் பலத்த கரகோஷத்தினிடையே அமைச்சர் ஜயவர்த்தன தமது உரையை நிகழ்த்த ஆரம்பித்தார். அவர் குறிப்பிட்டதாவது:

### எனக்கும் உரிமை உங்களுக்கும் உரிமை

இலங்கையின் ஒரு பகுதிதான் யாழ்ப்பாண மாவட்டம். இப்பகுதி மக்களும் இலங்கை மக்கள்தான். இந்த நாட்டின் ஒரு பிரஜை என்ற முறையில், இதர பிரஜைகளைப் போன்று இந்த நாட்டின் எந்தப் பகுதிக்கும் செல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. இன்று ஆட்சி பீடத்திலுள்ள அரசாங்கத்தின் ஓர் அங்கத்தவன் என்ற முறையில் உங்கள் மத்தியில் வந்து இப்பகுதியில் வாழும் மக்களின் தேவைகளை அறிந்து செல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. இதே சமயம் என்னை இங்கு அழைப்பதற்கும் இந்நாட்டு மக்கள் என்ற முறையில் உங்களுக்கு உரிமை உண்டு.

### என் குடும்பத்துக்கு உறவு இருக்கிறது

இவை தவிர எனது குடும்பத்துக்கும் தமிழ் மக்களுக்கும் உறவு இருக்கிறது.

ஐம்பதிதைந்து வருடங்களுக்கு முன் இந்த நாட்டுக்கு முதல் தடவையாக வாக்குரிமை வழங்கப்பட்டு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பேற்பட்ட பொழுது, உங்கள் சேர். பொன்னம்பலம் இராமநாதனையே இலங்கை மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்கு எனது தந்தையார் முயற்சி செய்தார். அச்சமயம் இந்தியாவில் தங்கியிருந்த சேர். பொன் இராமநாதனை எனது தந்தையார் ஹெக்டர் ஜயவர்த்தன இலங்கைக்கு அழைத்து படித்தவர்களின் பிரதிநிதியாக தேர்தலில் போட்டிக்கு நிறுத்தினார். இது 1911-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அத்தேர்தலில் எனது தந்தையாரும் எனது மாமனாரும் சேர். பொன். இராமநாதனை ஆதரித்து வெற்றிபெறச் செய்தனர்.

### இராமநாதனை மறக்கவில்லை

1915-ம் ஆண்டில் இராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு சிங்கள பௌத்தர்கள் நசுக்கப்பட்டு அழிக்கப்பட்ட சமயத்தில் சேர். பொன் இராமநாதன் இங்கிலாந்து சென்று அவர்களுக்காக வாதாடி வெற்றியீட்டிக்கொடுத்ததை இன்னும் சிங்கள மக்கள் மறக்கவில்லை. இன்றும் அவர்கள் நன்றியறிதலுடன் உள்ளனர்.

நான் யாழ்ப்பாணப் பகுதிக்கு இப்பொழுதுதான் முதல்தடவையாக வரவில்லை. 1930-ம் ஆண்டில் எனது தந்தையார் இங்கு சுப்ரீம்கோர்ட் நீதியரசராக கடமையாற்றியபோது அவரது அந்தரங்க காரியதரிசியாக நான் இங்குவந்து ஒரு மாத காலம் தங்கியிருந்தேன். அந்த இனிய நாட்களை நான் மறக்க முடியாது. அகில இலங்கை தேசியகாங்கிரஸ் காரியதரிசியாக யாழ்ப்பாணத்தில் நடந்த வாலிபர் காங்கிரஸில் நான்கலந்துகொண்டிருக்கிறேன். 1947-ம் ஆண்டுக்கும் 956-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் யு. என் பி அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது பிரதமர்களும் அமைச்சர்களும் இப் பகுதிக்கு வந்து திரும்புவது சாதாரண விஷயம். அந்தச்சமயத்தில் நானும் இக்கு பல தடவைகள் வந்து திரும்பியிருக்கிறேன். ஆனல் அப்போதிருந்த மகிழ்ச்சி பின்னர் இருக்கவில்லை.

1956-ம் ஆண்டுக்குப் பின் அமைச்சர்களும் பிரதமர்களும் இங்கு வருவதென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. அந்தக் கசப்பான சம்பவங்களை நாம் மறந்துவிடுவோம். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் உருவாக்கப்பட்டிருந்த அந்தத் துரதிர்ஷ்டமான அத்தியாயம் முடிவடைந்துவிட்டது.

### புதிய அத்தியாயம்

எமதுபிரதமர் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையில் தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் புதிய அத்தியாயம் ஆரம்பமானது. அதுமட்டுமல்ல நமது பிரதமரை தமிரசுக் கட்சி தனது வருடாந்த மகாநாட்டுக்குகிழக்குமாகாணத்துக்கு அழைத்ததன் மூலமும் தமிழ்க்காங்கிரஸ் தனது மகாநாட்டுக்கு யாழ்ப்பாணத்துக்கு அழைத்ததன்மூலம் இலங்கையின் சரித்திரத்திலும் சமூக ஒற்றுமையிலும் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுவிட்டது. இந்த சமூக ஒற்றுமையும் தேசிய ஐக்கியமும் இனியும் என்றும் நிலவுமென்பது எனது நம்பிக்கை.

1960-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியிலிருந்த படியால் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எம். பிக்களுடன் நெருங்கிப் பழகவும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தது. எங்கள் தலைவரைப் பற்றியும் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவசர காலநிலைமையை நீடிக்கவும், பார்லிமெண்டில் அங்கத்தவர்களின் பேச்சுரிமையைப் பறிக்கவும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கவும் முன்னைய அரசாங்கம் முனைந்து சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயன்ற சந்தர்ப்பத்தில் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த ஆட்சியை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றினோம். அச்சமயம் ஏற்பட்ட பொதுவான இணைப்பை நாம் கை விட்டுவிடாது மீண்டும் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தோம்.

தேசிய அரசாங்கம் உருவான முறை பற்றி விளக்கிய திரு. ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:

(5-ம் பக்கம் பார்க்க)

பகுதிகளில் சிங்கள தமிழருக்கிடையில் எந்தவித வேற்றுமையும் இல்லை. அங்கு அவர்கள் எந்தவித வேறுபாடும் இன்றி வாழ்கின்றார்கள்.

## மரண அறிவித்தல்

செல்வச்சந்நிதியைச் சேர்ந்தவரும் பிரபல சாத்திரியாரும் முன்னைநாள் இலங்கைவானொலி வயலின் வித்துவான் சங்கீத பூஷணம் திரு. சு. வி. பரமலிங்கம் அவர்களின் பெரிய தந்தையாரும்ஆகிய திரு. த. சு. சோதிலிங்கம் அவர்கள் 22-8-66ல் காலமானர். இவரது ஈமக்கிரியை 23-8-66-ல் மாதகலில் நடைபெற்றது. உறவினரும் அன்பரும் இதனை அறிவிப்பாகக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

883

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா வல்லிபுரம்

மூளாய் திருமதி நாகம்மா வல்லிபுரம் நேற்று 23-8-66 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் 24-8-66 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மூளாய் வீதியிலிருக்கும் அவரது இல்லத்திலிருந்து பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அவர் பண்டாரவளை வர்த்தகர் மு. வல்லிபுரம் அவர்களின் மனைவியும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி ஞானம்பிகை திகம்பரலிங்கம், கணேஷானந்தன், திருமதி கிருஷ்ணவேணி தங்கராசா, கோபாலச்சந்திரன் ஆகியோரின் தாயாரும் அ. அமிர்தலிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்). அ. திகம்பரலிங்கம், கு. தங்ராசா ஆகியோரின் மாமியாரும், வெலிமடை நாதன் ஸ்ரோர்ஸ் ஸ்தாபகர் இ. நாகலிங்கம், இந்திரா ஸ்ரோர்ஸ் ஸ்தாபகர் இ. சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியுமாவார்.

மூளாய், சுழிபுரம்.

936

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு [illegible] மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org